உ
சிவமயம்

# அருள் ஒளி




## துர்க்காதேவி மகோற்சவ சிறப்பு மலர்

ஆவணி மாத இதழ்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.
இலங்கை-2004

மலர் 25

உ

சிவமயம்

# செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்




அன்னதானக் கந்தனை அருள் வேண்டிப் பிரார்த்திப்போ

உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)



*ஆசிரியர்:*
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

*உதவி ஆசிரியர்:*
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

2004 தாரண வருடம் ஆவணி மாதம்

*வெளியீடு:* ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் **25**

## இந்துக்களே விழிப்பாக இருங்கள்!


மனிதன் தன்னைப்பற்றியும் தன்னைச் சார்ந்துள்ள பொருள்களைப் பற்றியும், என்று அறியவும், உணரவும் தொடங்கினானோ அன்றே அவன்பால் சமய உணர்வும் குடி கொண்டு விட்டது. தன்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும், தன்னையும் தன்னைச் சூழ உள்ள பொருள்களையும் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருள் செய்து வருகின்ற ஒரு பொருள் எதுவோ அதுவே இறைவன் என்றும் கடவுள் என்றும் கருதத் தொடங்கினான். காலப் போக்கினால் அப்பொருளுக்கும் தனக்கும் உள்ள இயல்பையும், அதனை அடைவதற்குத் தடையாக உள்ளவற்றையும் ஆராயத் தலைப்பட்டான். அவ்வுணர்வே சமய உணர்வாயிற்று. உலகில் பல்வேறு சமயங்கள் தோன்றி, ஒரு சில நின்று நிலைத்தன. ஆதியும் அந்தமும் இல்லாத தொன்மைச் சமயம் இந்து சமயம் என்பதனை கீழைத்தேய அறிஞர் மட்டுமல்ல மேலைத்தேய ஆய்வாளர்கள் பலரும் ஒப்புக்கொண்டனர். கிரேக்க உரோம நாகரீகங்களுக்கு முந்தியது இந்து நாகரீகம் என்பதனை மெய்ஞானிகளும் விஞ்ஞானிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்து மதம் பற்றிய தனித்துவச் சிறப்பை பிறமதத்தில் தோன்றிய மேலைத்தேய அறிஞர்கள் மொனீர்வில்லியம்ஸ், அன்னை பெஜன்ட் அம்மையார், விக்டர்கசின், ஆனோல்ட் ரொயின்பி, மாக்ஸ்முல்லர், ஜோன்மார்ஷல், சேர் அலெக்சாண்டர் கனிங்ஹாம்

போன்றவர்கள் மிகத்தொன்மை உயர் பண்பாடும் மிக்க சமயமாகப் போற்றி உலக அரங்கில் தமது ஆய்வுகளைச் சமர்ப்பித்தனர்.

அறிவுலகத்தாலும் ஆத்மீகவுலகத்தாலும் போற்றப்பட்ட இந்து மதத்தை சமீபகாலமாக சிலர், தமது சுய நலத்துக்காக சமயச் சடங்குகளையும் சமய வழிபாட்டு நெறிமுறைகளையும் கேலி செய்வது வேதனை தருகிறது. சமயம் பார்த்து சமயம் மாற்ற முனையும் சிலர் சில ஒலி நாடாக்களை வெளியிட்டும், தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் கேலி செய்து பேசி வருவதாகவும் அறிந்து கவலைப்படுகிறோம். இந்தியாவில் நகைச்சுவை நாடகம் தயாரித்து எமது சமய முறைகளை நளினம் செய்துள்ளனர். எனவே இந்து மக்களே! விழிப்பாக இருங்கள். எம்மதத்தை யார் அவமதித்தாலும் அதற்கு நிதானமான நேர்த்தியான பதில் சொல்லத் தயாராக இருங்கள். சம்பந்தர் சுவாமிகள், அப்பர் சுவாமிகள், ஆழ்வார்கள், சுவாமி விவேகானந்தர் மீராபாஸ் நாவலர் பெருமான் போன்றவர்கள் நிதானமாகச் சிந்தித்து எம்மதம் நோக்கி வந்த இடையூறுகளை எல்லாம் போக்கிக் காத்தனர். பிறமதத்தவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல இந்துக்கள். இந்து மதத்தவர்களை ஆசைகாட்டி ஏமாற்றி மதத்தின் மாண்பினை மாசுபடுத்துவதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்துக்களே! பல்வேறு வடிவங்களாக எம் சமயத்தை ஆட்கொள்ள பலர் புறப்பட்டு இருக்கும் இவ்வேளை சற்று சிந்தித்து, எம் முந்தையர் காத்த மாண்பினை காக்க முனையுங்கள். இந்தியா இலங்கையில் மட்டுமல்ல புலம் பெயர்ந்து நம்மவர் வாழும் மேலை நாடுகளில் குறிப்பாக ஜேர்மனி சுவிஸ் நாட்டில் நம் ஈழத்தவர்களை தம் வசப்படுத்தி தம் மதப் பிரசாரகர்களாக தாயகம் அனுப்பியுள்ளமை யாவரும் அறிந்ததே. பெற்ற தாயை மறப்பது போன்ற பாவமே பிறந்த மதத்தை மாசுபடுத்துவது. எனவே நாம் விழிப்பாக இருப்போமாக.

- ஆசிரியர்

# வாழ்த்துகிறோம்



## செல்வி ம. சுமித்திரா

எங்கள் தேவஸ்தானம் நிர்வகித்து வரும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்த மாணவி செல்வி ம. சுமித்திரா 2004 A/L கலைப்பிரிவில் 2A, B சித்தி பெற்று எமக்கு பெருமை தேடித் தந்துள்ளார்.

சிறந்த பேறு பெற்ற இராமநாதன் கல்லூரி
மாணவியாகிய இவரை
வாழ்த்துகிறோம்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,** J. P.
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

சிவன் துணை

# தில்லையம்பலவன் திவ்யஅருட்டிறன் கிட்டுக!

‘அம்மா!’

திருவருள் துணை ஆகுக! என்றோ எழுத நினைந்தது; இன்றே மனக்கனி வீழ்ந்தது! -ஏற்றருள்க - ஏதும் குறை காண்மின், மன்னிக்க! குறையிருக்கும் சிறு மதலை யானம்மா!!

## அருள் நல வாழ்த்து மலர்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி நயமும்
அன்பொடு குழைந்த ஆற்றலுஞ் சான்றவர்!
தமிழ்நலம், சமயநலம், தகைசார் மதிநலம்
தனிநலம் தோய்ந்த மாண்பு நலந்தோய்ந்தவர்!

தர்க்கம் கடந்தவர், தன்னல மறுத்தவர்!
தண்ணளி அணியைத் திருவெனப் புனைந்தவர்!
வர்க்கம் கடந்திட்ட வாண்மைசேர் தொண்டினால் அருள்
வாரிதி ஆகியே தன்பணி தொடுத்தவர்!

தொன்மை சேர் ‘தெல்லிப்பதி’ எனும் நன்நகர்
தோன்றியே கணக்காயர் தொண்டினிற் றன்னாள் பதித்தவர்!
நன்மைசேர் மனத்துடைச் **சிவத்தமிழ்ச் செல்வியார்** செதுக்கிய பணிகளோ வாடா
நறுமலர் அன்னதாய் வையமிசை விளங்குமே!

போர்நிலைச் சூழல் புகுந்த காலையுந்தன்பணி
பிறங்காதே, தாளாண்மைத் தண்ணளிப் பிரபைவீசிட
தேர்நிலைத் தத்துவம் அன்னதாய்த் தேசம் மிழற்றிடும்
தேவியின் தூய்பணித் திறன் கண்டு வழுத்துவோம்!

- அடியவர்

# சைவசமய வளர்ச்சிக்குப் பெண்கள் ஆற்றிய தொண்டுகள்

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அவர்கள்

**சை**வம் சிவசம்பந்தமுடையது. சிவம் அன்புமயமானது. எனவே அன்பு நெறியே சைவநெறி அதுவே பழந்தமிழ்க் கொள்கைத் திரட்சியாகவும் காணப்படு கிறது. அது எந்தச் சமயத்திற்கும் கொள் கைக்கும் முரண்படுவதன்று. எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கி அவற்றுள் அடங்காப் பெருநெறிகளையும் தமதாக்கிப் பரந்து பெருநோக்குடன் விளங்குவது சைவ சமயம். வேதாகமங் களே சைவத்தின் முதனூல்களாகும். வேதங்கள் இறைவனை மனம் வாக்குக் காயங்களுக்கப்பாற்பட்டவனாகக் காட்டின. ஆனால் ஆகமங்களோ எங்குமுள்ள பொருளை எங்கும் காணலாம் என்று காட்ட முயன்றன. அதாவது சிறந்த இடத்தைத் தூய்மை செய்து நீர், மந்திரம், இயந்திரம், கிரியை முதலியவற்றால் இறைவன் திருவரு ளைத் தேக்கும் வழியைக் காட்டியது. இந்த வகையிலே பீடம், கருவறை, விமானம், பெருமண்டபம், திருச்சுற்று, ஆகியவற்றாலும் நந்தி, பலிபீடம், கொடி மரம், கோபுரம் என்பவற்றாலும் பெருங் கோயிலமைத்து வழிபடும் மரபு சைவ மக்கள் மத்தியில் வளர்ந்து வந்தது. கட்டிய கோயிலைப் புதுக்குவிப்பதும், நித்திய நைமித்திகங்களைச் சிறப்புற நடாத்துவதும் கோயிலை மையமாகக் கொண்டு சைவச் செந்நெறி வளர்தற்கான தொண்டுகளை யாற்றுவதும் சைவமக்கள் பெருங்கடனா கும். இப்பணியில் மலேசியா வாழ் சைவ மக்கள் பெரும் பங்கெடுத்து வருகிறார்கள். சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கத்தினரின் சிவப்பணியை இச்சமயத்தில் போற்றி நிற்கி றோம். நிற்க சமயப்பணியில் ஆண்களோடு பெண்களும் சமபங்கெடுத்துப் பணிபுரிந்துள் ளனர் என்பதை எமது சைவசமய வரலாறு காட்டுகிறது. பெண்மையின் சக்தியைக் காட்டுவதற்காகவே இறைவன் மாதொரு பாகனாய் விளங்குகிறான். அடியார்களுக்கு அருள் செய்ய வருங்காலத்தும் அம்மையை இடப்பாகத்திற் கொண்டே எழுந்தருளு கிறார். இருநாழி நெற்கொண்டு எண் ணான்கு அறமும் வளர்த்தவள் அம்பிகை.

> "சிவமெனும் பொருளும் ஆதி சக்தியோடு சேரின் எத்தொழிலும்
> வல்லதாம் அவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது."

அரிதெனா மறை இசைக்குமால் என்பது சௌந்தரியலகரி. எனவே அவனது உருவாயமைந்த மகளிர் அறம் வளர்ப்பவ ராய், அன்னபூரணிகளாய், விளங்கிச் சமயத் தொண்டாற்ற வேண்டியவர்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே ஔவையார் போன்ற பெண் புலவர்கள் சிவநெறி வாழ்வு வாழ்ந்தனர். அதிகமான் அரிதிற்பெற்ற நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த பொழுது எல்லாம் வல்ல சிவபெருமானின் அற்புதத்தோடு ஒப்பிட்டு அரசனைப் பாராட்டுகிறார் ஔவை. "இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்" என்று மொழிந் தாரே சிவபெருமான். அந்தப் பெருமை பெற்ற காரைக்காலம்மையார் சைவத் திருத்தொண்டில் தன்னை அர்ப்பணித்த பெருந்தகையார். கணவனுக்கு முன்னணி யில் நின்று அவனாலேயே "தெய்வம்" என்ற போற்றுதலையும் பெற்று அருள் வாழ்வு வாழ்ந்தவர் அம்மையார். கணவன் தம்மை விட்டு நீங்கிய போது சிவநெறியில் ஊன்றி நின்று தமது உடலழகு அலங்கார மனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு இறைவனிடமே பேய் வடிவை வேண்டிப் பெற்றவர்.

> ஈங்கிவன் குறித்தகொள்கை இது இனி இவனுக்காக
> தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதிகழித்துன்பாலே

[library stamp] யாழ்ப்பாண...

ஆங்கு நின் தாள்கள் போற்றும் பேய்வடிவடியேனுக்குப்
பாங்குற வேண்டுமென்று பரமன்தாள் பரவி நின்றார்
- பெரியபுராணம்

இறையருள் வழி நின்று எலும்பும் தோலு மாகிய பேய்வடிவு கொண்டு

"இடர்களை யாரேனும் எமக்கிரங்காரேனும்
படமும் நெறி பணியாரேனும் – சுடர் உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என் நெஞ்சு எமக்கு"

என்று வைராக்கிய பக்தி மிளிரப் பாடல்களைப் பாடினார். தெய்வத் திருவருட் பாசுரங்களைப்பாடி நாயன்மார்களுக்கே வழி காட்டியவர் காரைக்காற் பேயார். இல்லறத்தில் நின்று சிவனடியார்களைப் பேணல், கணவனால் நீக்கப்பட்டபின் ஆண்டவன் ஒருவனுக்கே ஆளாதல் தெய்வப்பாசுரங்களைப்பாடி சிவநெறிக்கு அரண் செய்தல். ஆகியவற்றில் முன்னின்று வழி காட்டினார் காரைக்கால் பேயார்.

மங்கையர்க்குத் தனியராகிய பாண்டிமாதேவி, தனது நாட்டில் சமண இருளைப் போக்கிச் சைவ விளக்கை ஏற்றி வைத்தவர். ஏழாவது நூற்றாண்டிலே சைவ உணர்வும் சைவ ஒழுக்கமும் தடுமாறிச் சிறுமையுறுவது கண்டு மனங்கலங்கி நின்றவர் அரசியார். ஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு அழைத்து சைவத்தை விளங்க வைத்தவர். நெறிமாறியிருந்த தன் கணவனைச் சைவனாக்கி மேன்மை பெற்றவர். சைவ வாய்மை ஒழுக்கத்தில் ஊன்றி நின்ற அரசியாரையும் அமைச்சனாரையும் ஞானசம்பந்தப் பிள்ளையார் கண்ணுற்று

"சூழுமாகிய பரசமயத்திடைத் தொண்டுசெய்து
வாழு நீர்மையீர் உமைக்காண வந்தனம்"

எனக்கூறித் திருவாய் மலர்ந்தருளினார். ஆலவாய் அப்பனையும் அங்கயற்கண்ணி அம்மையையும் வழிபட நின்ற பெருமானுக்கு மங்கையர்க்கரசியாரின் சைவத் தொண்டே முன்னிற்கிறது. அதனைத் தேவாரத் திருப்பதிகத்தில் அழகுற அமைத்துள்ளார்.

"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன் திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணி செயப் பாரிடை நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தம்
தண் எருக்கம் மலர் வன்னி
அந்தி வான் மதிசேர் சடைமுடியண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே"

சேக்கிழார் சுவாமிகளும் மங்கையற்குத் தனியரசி எங்கள் தெய்வம் என்று போற்றுகிறார். கணவனால் தெய்வம் என்று பாராட்டப்பட்டர் காரைக்காலம்மையார். சேக்கிழார் சுவாமிகளால் தெய்வம் என்று பாராட்டப்பட்டவர் மங்கையற்கரசியார். அரசியாரின் அறிவும், ஆற்றலும் சைவப் பற்றும் பாண்டி நாட்டின் பெருமையை வழி வழியாக பேணிக்காத்தது என்று கூறினால் அது மிகையாகாது. திருக்களிற்றுப் படியாரில் ஒரு பாடல் மிகச்சுவையாக அமைந்துள்ளது. சம்பந்தரைப் பார்த்து வினாவுவது போன்ற பாணியிலே அப் பாடல் வருகின்றது அதாவது "சம்பந்தா நீ பொய்கைக் கரையிலே இருந்து அழுததைக் கண்டு பால் சுரந்த அன்னையோ அல்லது உனது வருகையை அறிந்து கண்ணீர் சொரிந்த அரசியோ சிறந்தவர்கள் என்பதைச் சொல்வாயாக" என்பது அப்பாடலின் பொருளாகும். இத்தகைய நிலையில் உமையம்மையையும் மங்கையர்க்கரசியையும் ஒப்பிட்டு நோக்கும் சிறப்பை நாம் காண்கின்றோம். ஞானசம்பந்தருடைய குழந்தைத் தன்மையை நினைந்து பேதலித்த மனத்தையுடையவராகி அரண்மனையிலே கண்ணீர் சொரிந்து "இச்சிறுவனுக்கு யாராவது தீங்கு செய்து விடுவார்களோ" என்று அஞ்சினார் அரசியார். அதனை உணர்ந்த ஞானக்குழந்தை "மானினேர்வழி மாதராய் வழுதிக்கு மாபெரும் தேவிகேள் பானல்வாய் ஒரு பாலன் ஈங்கு இவன்

என்று நீ பரிவெய்திடல் ஆனை மாமலை ஆதியாய இடங்களிற் பல அல்லல்சேர், ஈனர்கட்கெளியேன் அல்லேன் திரு ஆலாவாய் அரன் நிற்கவே" என்று பாடி அரசியாரின் துன்பத்தைத்துடைத்தார். பாண்டி நாட்டில் ஆலயங்கள் மீண்டும் புத்தொளி வீசவும் திருநீற்றின் பெருமையை சைவ உலகம் அறிந்து உய்யவும் பாண்டியன் மரபுக்கு இழிவு நேரிடாமல் இருக்கவும் பணியாற்றியவர் மங்கையற்கரசியார். கொண்டவனைப் பேணிய பெருமையும் சைவத்தில் மீண்டும் நிலைபெறச் செய்த பெருமையும் மங்கையர்க்கரசியாரையே சாரும்.

"தூண்டுதவ விளக்கனையார்" எனப்போற்றப்படுபவர் திலகவதியார். அவர் தனக்கு என ஒரு தனிப்பாதையை அமைத்துக்கொண்டு தம்பியைச் சைவ தொண்டனாக்கும் பணியில் கண்ணும் கருத்துமாக அரும்பாடு பட்டார். இளமை மோகங்களில் நாட்டம் செலுத்த வேண்டிய காலத்தில் விதியின் சதியினால் திசை திருப்பப்பட்டு அனாதரவான நிலையில் ஆண்டவன் ஒருவனையே பற்றிக் கொண்டார். தம்பியாராகிய மருள் நீக்கியார் சமணசமயத்தில் சேர்ந்து விட்டார் என்பதை அறிந்து பெரும் துன்பமுற்றார். ஏனென்றால் முன்னமே தன்னுயிரை விடுத்து இறைவன் அடியைச் சேர இருந்தவரை தம்பியின் பாசமே மீட்டும் உயிர்வாழச் செய்தது. அந்த நிலையில் வாழ்ந்தவருக்குத் தம்பியின் மதமாற்றம் தாங்கொணாத்துயரைக் கொடுத்தது. தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவு மேலும், மேலும் உள்ளத்தில் பெருகி ஓங்கியது. வீரட்டானேசப் பெருமானை தினந்தோறும் வணங்கிப் பணிசெய்து வருபவர் அன்று ஒருநாள் வரமொன்றை வேண்டிக்கொண்டார். அதாவது தன் தம்பியைச் சைவத்துக்கு மீட்டுத்தர வேண்டும் என்பதாகும். அவர் வேண்டுதலை ஏற்ற இறைவன் சூலை நோயைக் கொடுத்து மருள்நீக்கியாரை திருநாவுக்கரசர் ஆக்கினான் அன்றே! தன் தம்பிக்கு திருநீறும் கொடுத்து, திருவைந்தெழுத்தையும் உபதேசித்து, சிவாலய வழிபாட்டுக்கும் வழிகாட்டியவர் திலகவதியார். உழவாரத் தொண்டு புரிவதற்கு வழிகாட்டி வைத்தவரும் இவரே இதனாலேயே தவத்தைத் தூண்டிய விளக்குப் போன்றவர்; தம்பியைத் தூண்டிய விளக்குப் போன்றவர்; சைவத்தைத் தூண்டிய விளக்குப் போன்றவர் என்று கருத்தமையச் சேக்கிழார் சுவாமிகள் தூண்டுதவ "விளக்கனைநூர்" என்று போற்றுகின்றார். திலகவதியாரின் சேவையினால் திருத்தொண்டுக்கு ஒரு அப்பர் தோன்றினார் என்று பெருமையோடு நினைக்கின்றோம் அல்லவா!

பெரிய புராணத்தில் மேலும் பல சிவனடியார்களுடைய சைவ வாழ்வுக்கு வழிகாட்டிய பெண்மணிகளைப் பற்றி அறிகின்றோம். திருவாசகத்தில் பெண்களின் ஆடல்களைக் காட்டுவதன் மூலம் அவர்களுடைய சைவ ஒழுக்கத்தை விளக்கியுள்ளார் மணிவாசகர். பாவை நோன்பு போன்றவை பெண்களினால் அனுட்டிக்கப்பட்டவை. பெண்கள் இறைவனை நோக்கி

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவா, அவர்உகந்து சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம், இன்னவகையே எமக்கெங்கோன்
நல்குதியேல் என்ன குறையும் இலோம் என்று"

பாடி நிற்கும் சிறப்போடு பெண்களுடைய நோன்பு முறை பேசப்படுகின்றது. ஆண்டாள் திருப்பாவையிலும் பெண்கள் கண்ணபிரானை வழிபட்டு நாட்டின் நல்வாழ்விற்காக வேண்டிநிற்கும் வரங்கள் காட்டப்பட்டுள்ளன. இன்னும் பத்தாம் பதினொராம் நூற்றாண்டில் சோழர்கள் திருப்பணி செய்த காலத்தில் பெண்கள் அவர்களுக்குக் கொடுத்த ஒத்துழைப்பை சரித்திரம் காட்டுகின்றது. செம்பியன் மாதேவி என்ற அரசி சிவாலயத் திருப்பணிகளில் மிகவும் அக்கறை காட்டினார். குந்தவைப் பிராட்டியார் தனது சகோதரன் இராஜராஜ

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

சோழனுக்கு சிவாலயத் திருப்பணி செய்யும் அவசியத்தை நாளும் பொழுதும் உணர்த் தியதன் பேரிலேயே தஞ்சைப்பெருங் கோயில் கட்டி எழுப்பப்பட்டது. திருமுறை கண்ட சோழனுக்கு ஆதரவு அளித்து அப் பணியில் ஊக்கம் கொடுத்தவர்கள் சோழ அரசியர்களே.

நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் ஆகிய காலங்களிலும் பல பெண் மணிகள் சைவ வாழ்வு வாழ்ந்து தம் கணவருடைய சமயவாழ்வுககு வழிகாட்டிச் சமயப்பற்று உடையவர்களாக விளங்கி னார்கள். பிற்காலத்திலும் அன்னை சாரதா தேவி, கஸ்தூரிபாய் போன்ற பெண்மணிகள் சமய வளர்ச்சியிலும் ஆன்மீகப் பாதை யிலும் பெரும் பங்கு கொண்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே. என்னை இந்த நிலைக்கு ஏற்றி வைத்தவள் என் மனைவி சாராதாவே என்று போற்றுகின்றார் ஸ்ரீபரம கம்சர். சுவாமி விவேகானந்தரைப் பெற்று எடுத்த தாயின் தூய சக்தியை நாம் மறக்கமுடியாது. மகாத்மா காந்தியடி களைச் சத்திய நெறியில் வழிப்படுத்திய அவரின் அன்னையாரை எவரும் நினைவு கூறுவர்.

ஆகவே தெய்வீக வாழ்வு என்பது இல்லறமாகிய மனைவாழ்க்கையென்னும் வித்தில் தோன்றி விரிந்து கிளைத்த விளைவேயாகும். இவ்வித்து அன்பு நீராலும் அருட் காற்றாலும் இன்ப வெப்பாலும் செழித்து முளை கொண்டு வளர நிறைநெஞ்சமுள்ள மங்கையரே காரணர்களாவர். பெண் என்பது பெட்பு என்னும் பண்பினை உணர்த்தி நிற்கிறது. அதாவது விருப்பத்திற்குரியவர்கள். அவ்விருப்பு பெருவிருப்பாகச் சிவவிருப்பாக அமைகிறது. இதனாலேயே ஆன்மாக்கள் அனைத்தையும் பெண்ணெனப் பெரு நூல்கள் பேசுகின்றன. மாதர்கள் தாயாம் நிலையிலும் மனைவியாம் நிலையிலும் உடன்பிறப்பாம் நிலையிலும் மனைக்கு முதல்வியாம் நிலையிலும் பொறுப்பு டையவர்கள். சைவ ஒழுக்கம் பேணும் பெண்மணிகள் பன்னிரு திருமுறைகளைப் பேணி வாழும் பயிற்சியுடையவர்களாக விளங்கவேண்டும். திருமுறைகளைக் குடும்பத்துடன் சேர்ந்து வாரத்தில் ஒரு நாளைக்கேனும் ஓதும் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். திருவிளக்குப் பூசை மலராலும் அட்சதையாலும் ஆற்றி வீட்டில் மங்கல நிலையை ஏற்படுத்த வேண்டும். விரதங்களை அனுட்டித்தலும் சிவாலயப் பணிகளாகியவற்றைச் செய்தலும் செய்வித்தலும் மங்கையரின் தலையாய பணிகளாக அமையவேண்டும். எனவே சமய வாழ்வில் பெண்கள் பங்கு மகத்துவ மானது என்பதை உள்ளத்தே கொண்டு மனையறத்தின் வேரனையராய் தம்மைக் காத்துத் தற்கொண்டானைக் காத்து, நாட்டைக் காத்து, சைவத்தைக் காத்து, தனிப்பெருஞ் சக்தியினராய் விளங்க வேண்டும் என்பது திருவருட் கட்டளை யாகும்.

**(சிலாவகூர் இலங்கை சைவர் சங்கமலர்)**

## திருப்பாத மலருக்கு அரோகரா

அரோகரா எங்கள் தாய்க்கு அரோகரா
சக்தி தாய்க்கு அரோகரா
சர்வ உலகைக் காப்பவளுக்கு அரோகரா
ஈஸ்வரன் துணைகிக்கு அரோகரா.

தேவிக்கு அரோகரா துர்க்கைக்கு அரோகரா
ஆதி பராசக்திக்கு அரோகரா
உலகைக் காக்கும் அம்பிகைக்கு அரோகரா
பார்வதி தேவிக்கு அரோகரா

திரிசூலம் ஏந்திடும் காளிக்கு அரோகரா
தர்மத்தைக் காப்பவளுக்கு அரோகரா
சிங்க வாகனத்தில் அமர்பவளுக்கு அரோகரா
நவசக்தித் தாய்க்கு அரோகரா

தெல்லிப்பழையில் வீற்றிருக்கும் எங்கள்
துர்க்கை யம்மனுக்கு அரோகரா
கருணைக் கடலே துர்க்காதேவியே உன்
திருப்பாத மலருக்கு அரோகரா

**செல்வி கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை**

## தெல்லிப்பழை
# ஸ்ரீ துர்க்காதேவி கோயில்

**திருமதி வசந்தா நடராஜன்**, B. A.
- கனடா

எங்கும் நிறைந்தவனாக, எல்லாம் வல்லவனாக, அணுவுக்கணுவாய், அப்பாலுக்கப்பாலாய், ஓருருவம், நாமமின்றி, அகிலத்தை ஆள்பவன் இறைவன். எங்கும் நிறைந்த இப்பரம்பொருளைச் சிவம் என்று போற்றுகின்றோம். நெருப்பிலே சூடு போலச் சிவத்துடன் இரண்டறக் கலந்திருப்பவள் சக்தி. சிவம் வேறு சக்தி வேறல்ல. ஒன்றின் அம்சமாக மற்றொன்று காணப்படுகின்றது. பழந்தமிழர் வழிபாட்டிலே, சக்தியைப் போற்றி வணங்குவது முதன்மைக்குரிய தாகக் காணப்படுகின்றது. சிவபூமியாக விளங்குகின்ற ஈழத்திலே சக்தி வழிபாடும் புராதன வழிபாடாகக் காணப்படுகின்றது. தெல்லிப்பழையில் துர்க்காதேவி, நயினை நாகபூஷணி அம்மன், நல்லூர் வீரமாகாளி அம்மன், தாழையம்பதி துர்க்கை அம்மன், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன், திரு கோணமலை பத்திரகாளியம்மன், வற்றாப் பளை கண்ணகை அம்மன், மாத்தளை முத்துமாரி அம்மன் போன்ற பல கோயில்கள் ஈழத்தில் பிரசித்தி பெற்ற அன்னையின் வழிபாட்டுத் தலங்களாகக் காணப்படுகின்றன.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம், உலகெங்குமுள்ள உபாசகர் களால் ஏற்றிப் போற்றப்படும் ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ்ப் பாணத்தின் வடபால், காங்கேசன்துறைப் பெருந்தெரு வழியே, எட்டாவது மைல் கல் தொலைவில் அமைந்திருக்கின்றது. இவ்வாலயம் இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையை உடையது. இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ துர்க்காதேவி, சகல வல்லமை படைத்த வளாக, வேண்டியவற்றை வேண்டியாங்கு பக்தர்களுக்குக் கொடுப்பவளாக விளங்குவ தால், தாயைத் தேடி ஓடும் கன்றைப்போல துர்க்கை அன்னையை நாடிப் பக்தர்கள் ஓடுகின்றனர். இவ்வன்னை பக்தர்கள் வேண்டுவதையெல்லாம் வாரி வழங்குபவ ளாகக் காணப்படுகின்றாள். இத்தேவியின் மகிமை அபிராமிப்பட்டரின் திருவாய் மொழிக்குப் பொருத்தமானதாகக் காணப்படு கின்றது.

**தனந்தரும் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா**
**மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா**
**வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பர்க்கே**
**கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே**

அகிலாண்டநாயகியான அன்னை பராசக்தியின் துர்க்கா திருக்கோலம், மக்களை வாழவைக்கும் தன்மையுடையது.

இவ்வாலயத்தின் பூர்வீகவரலாறு கதிர்காமர் என்னும் சைவப்பெரியாரோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இவர் தெல்லிப்பழையிலுள்ள உழுகுடைப் பதியில், வவுணாவத்தையில் சைவமரபிலே தோன்றியவர். திருமூலர் வாக்கிற்கிணங்க ஊனுடம்பு ஆலயம் என்னும் சைவ நெறியின் உத்தமநெறியிலே ஒழுகியவர். எங்கெல்லாம் சைவாலயங்கள் காணப்படு கின்றனவோ அங்கு சென்று வணங்கித் தலயாத்திரை செய்வதில் இன்பங் கொண்டவராகக் காணப்பட்டார். இவரது இந்த ஆர்வத்தின் பயனாகவே தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலயம் தோன்றியது.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமான தொடர்பு, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்தே காணப்பட்டுள்ளது.

அங்குள்ள மக்கள் இங்கு வருவதும் இங்குள்ள மக்கள் அங்கு செல்வதும் சாதாரண வழக்கமாகக் காணப்பட்டுள்ளது. அவ்வாறே தென் இந்தியாவை ஆண்ட அரசர்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆண்டுள்ளனர். ஈழமன்னர்கள் தென் இந்தியாமீது போர் தொடுத்துள்ளனர். இவ்வாறான நிகழ்வுகள் காலங்காலமாக நடைபெற்றுத் தற்காலத்திலும் தொடர்கின்றது. இலங்கைக்கும் இந்தியாவிற்குமான தொடர்பினால் தென்னிந்திய அரசர்கள் ஈழத்தில் பல சைவக் கோயில்களைக் கட்டியும் திருத்தியும் சைவப்பணி புரிந்துள்ளனர்.

இருநாடுகளுக்குமான தலயாத்திரை கடல் போக்குவரத்தின்மூலம் பெரிதும் விருத்தியடைந்து காணப்பட்டது. ஈழத்திலிருந்து தல யாத்திரைக்காகச் செல்வோர், அங்கிருந்து தெய்வ மூர்த்தங்களைக் கொண்டுவருவது சாதாரண விடயமாக அக்காலத்தில் காணப்பட்டது. கற்றோரும் மற்றோரும் ஞானியாரும் ஈழத்திலிருந்து சென்று, இந்தியாவில் தங்கிச் சமயப்பணி, தமிழ்ப்பணி புரிந்துள்ளமையைச் சான்றுகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது. இவ்வாறானவொரு சூழ்நிலையே தெல்லிப்பழையில் துர்க்கையம்மன் அருளாட்சி ஏற்படக் காரணமாக அமைந்ததெனலாம்.

வவுணாவத்தை உழுகுடைப் பதியில் வசித்த பெரியவர் கதிர்காமர், 1750ஆம் ஆண்டளவில் தலயாத்திரை செய்யத் தீர்மானித்தார். அண்மையிலிருந்த காங்கேயன்துறையிலிருந்து தோணியேறி, தென்னிந்தியாவிலுள்ள வேதாரணியம் கரையை அடைந்தார். இவர் தலயாத்திரை சென்ற காலத்தில் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. விரும்பிய போது, விரும்பிய இடங்களுக்குச் சென்று வர எந்தத் தடையும் காணப்படவில்லை. வேதாரணியத்திலுள்ள தலங்களைத் தரிசித்த கதிர்காமர், பாதயாத்திரையாகக் காசிசெல்லத் தீர்மானித்தார். பாதயாத்திரை செல்லும் வழியிலுள்ள தலங்களைத் தரிசித்து இறுதியில் காசியை அடைந்தார். ஏறக்குறையப் பத்துவருடங்களாகத் தலங்களையெல்லாம் தரிசித்து வழிபாடியற்றி வந்தார். இக்காலப்பகுதியில் தமிழில் மேலும் தேர்ச்சி பெற்றதோடு சமஸ்கிருதத்தையும் கற்றுத் துர்க்காதேவி உபாசகராக மாறியிருந்தார். 1760ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பத் தீர்மானித்த கதிர்காமர், தன்னோடு துர்க்காதேவி இயந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த திருமுகக் கெண்டி ஒன்றினையும் கொண்டு வந்தார்.

திருக்கோயிலின் உயிர்நிலையாக மூலஸ்தானம் அல்லது கருவறையில் எழுந்தருளியுள்ள திருவுருவம் விளங்குகின்றது. திருக்கோயிலுக்குச் செல்லும் பொழுது முதலில் கண்ணில்படுவது கோபுரம். முதலில் கோபுரத்தை வணங்கிய பின்னர் கோயிலினுள் சென்று கருவறையில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியையும் ஏனைய தெய்வங்களையும் வழிபடுகின்றோம். திருக்கோயில்களிலே எழுந்தருளியுள்ள இத்தெய்வங்களின் அருள்வீச்சிற்கு, மந்திரங்களினால் அருள்பெற்ற யந்திரப்பிரதிஷ்டையும் கும்பாபிஷேகக் கிரியைகளுமே காரணமாகக் காணப்படுகின்றன. கோயிலின் உயிர்நிலையாகவுள்ள கருவறைத் திருவுருவம் இறைவனின் அருள் வடிவமாகவும், கோபுரம் இறைவனின் அருட்சின்னமாகவும் விளங்குகின்றன. சாதாரண உலக வழக்கில் யந்திரம் என்பது இயக்கும் கருவியைக் குறிப்பது. யந்திரம் இல்லாத வண்டி ஓடாது. அதே போல யந்திர பிரதிஷ்டை செய்யப்படாத திருவுருவத்தில் பூரணமான தெய்வீக அலைகள் ஏற்படுவதில்லை எனப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான மந்திரசக்தியுள்ள துர்க்காதேவி யந்திரமொன்றைப் பெரியவர் கதிர்காமர், ஈழம் திரும்பும்பொழுது கொண்டுவந்தார். இந்தியாவிலுள்ள சக்திபீடங்கள் அறுபத்துநான்கு எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் காசியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் சொப்பனேஸ் வரி பீடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இங் குள்ள துர்க்காதேவி பீடம், சகல கலை களுடனும் அருட்பொலிவுடன் விளங்கும் சக்திபீடமாக விளங்குகின்றது. பல வருடங்கள் காசியில் தங்கியிருந்த கதிர்காமர், அன்னையின் பெருமையையும் புகழையும் எண்ணத்தில் கொண்டு, தன்னுடன் கொண்டு வந்த யந்திரத்தைக் காசியிலிருந்தே பெற்றிருக்க வேண்டும் என்பது சான்றோர் கருத்தாகக் காணப்படு கின்றது.

காசியாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிய கதிர்காமர், காங்கேயன் துறையை வந்தடைந்து, கீரிமலை சென்று அங்கு தீர்த்தமாடி, ஆலயதரிசனம் செய்தார். பின்பு அங்கிருந்து மூன்று மைல் தூரமுடைய தெல்லிப்பழையை நோக்கி நடந்துவந்து கொண்டிருந்தார். இவ்வாறு நடந்து வரும்பொழுது களைப்பு மேலீட்டால் நடையிலே தளர்வுகண்டார். இந்தியா வெங்கும் பல நூற்றுக்கணக்கான மைல் களைப் பாதயாத்திரையாகச் சென்ற கதிர்காமரின் உள்ளக்கிடக்கையில் ஒளிந்திருந்த அன்னை துர்க்கையானவள், அவ்விடத்திலே தங்கத் திருவுளம் கொண்டாள் போலும். களைப்பு மேலீட்டால் அங்கிருந்த இலுப்பைத்தோப்பிலே இளைப் பாறினார்.

திருவருட் கருணையால் அவர் முன் ஒரு சோதி தோன்றி, அவர் காசியிலிருந்து கொண்டு வந்த துர்க்கா யந்திரத்தை அவ்விடத்திலே ஸ்தாபிக்கு மாறு ஆணையிட்டது. அவ்வாக்கைச் சிரமேற் கொண்ட கதிர்காமர், அவ்விடத்திலிருந்த இலுப்பைமரத்தடியில் யந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபடத் தொடங்கினார். இவ்வாறு இவர் வழிபட ஆரம்பித்த இடமே இன்று தெல்லிப்பழை, உழுகுடைப்பதி துர்க்கா தேவி தேவஸ்தானமாக மாறியுள்ளது. இத்தோப்பிலே பூசைநேரத்தில் நாகசர்ப் பங்கள் வருவதுண்டு. அவை பூசை முடிந்தவுடன் மறைந்துவிடும். இந்த நாகசர்ப்பங்களால் எவருக்கும் எவ்விதமான துன்பமும் ஏற்படவில்லை. இவற்றைக்கண்டு பக்தர்கள் அச்சமடையாது வழிபட்டு வந்துள்ளனர். பூசை நேரங்களில் குருக்கள் இவற்றிற்குப் பாலும் பழமும் வைத்து வழிபடுவதும் அவை இவற்றை உட்கொள்ளலும் உண்டு. இவ்வாறு கதிர்காமரால் ஸ்தாபனம் செய்யப்பட்ட துர்க்காதேவி யந்திர வழிபாடு ஆன்மார்த்த வழிபாடாகவே ஆரம்பத்தில் காணப்பட்டது. தற்காலத்தில் அழகிய தேவஸ்தானமாகி, கோபுரமும் அலங்கார வளைவும் கொண்ட நுழைவாயிலுடன், தெப்பக்குளமும் அமைந்து எழிலுக்கு எழிலூட்டும் அருள்மிகு சக்தி ஆலயமாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் விளங்குகின்றது.

ஆன்மார்த்த வழிபாட்டு முறையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம், தற்காலத் தில் ஆகமமுறைப்படி, நடைபெறும் வழிபாட்டு முறைகளைக் கொண்ட பரார்த்த பூசைக்குரிய தேவஸ்தானமாக மாற்றம் பெற்றுள்ளது. ஏறக்குறைய நூற்றிஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சிபுரத்தி லிருந்து அந்தணப்பெரியாரொருவர் யாத்திரை நோக்கமாகப் படகு மூலம் காங்கேயன் துறையை வந்தடைந்தார். அங்கிருந்து புறப்பட்டுத் தெல்லிப்பழையை வந்தடைந்தார். களைப்பு மேலீட்டாலும் பசியாலும் உழுகுடைப்பதியில் ஒரு மரத்தின் கீழ் அயர்ந்து தூங்குவராயினர்.

உழுகுடைப்பகுதியில் நாகநாத உடையார் என்பவர் செல்வமும் செல்வாக்கும் படைத்தவராகக் காணப்பட்டார். ஒரு குறித்தினத்தன்று அவருடைய கனவிலே ஸ்ரீ துர்க்காதேவி தோன்றி, தன்னையும் அநாதரவாயிருக்கும் காஞ்சி அந்தண ரையும் ஆதரிக்குமாறு உணர்த்தினாள். ஆதியில் கதிர்காமர் காசியிலுள்ள சக்தி பீடங்களுள் ஒன்றான சொப்பனேஸ்வரி பீடத்திலிருந்தே துர்க்காதேவி யந்திரத்தைக் கொண்டு வந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. சொப்பனம் என்றால் கனவு என்று பொருள்படும். சொப்பனத்தில் தேவி உணர்த்திய அருள்வாக்கின்படி, நாகநாத உடையார் ஆலயத்தையும் அந்தணரையும் ஆதரிக்க முற்பட்டார். தேவியின் கருணைக் குப் பாத்திரமாக விளங்கிய காஞ்சியி லிருந்து வந்த அந்தணரையே துர்க்காதேவி ஆலய அர்ச்சகராக நியமித்தார். அவ்வந்தணரின் சந்ததியினரே இன்றும் இவ்வாலய அர்ச்சகர்களாக இருந்து வருகின்றனர்.

எட்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஸ்ரீசங்கர பகவத்பாதர் அருளிய அறுவகை வழிபாடு, இந்து மதத்திற்கு ஆதாரமாக விளங்குகின்றது. சக்தியை முழுமுதற் தெய்வமாகக் கொண்ட சமயம் சாக்தம் என அழைக்கப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் சக்தி வழிபாட்டில் தந்திர சாத்திரம், நரபலி போன்ற அம்சங்கள் காணப்பட்டன. இவற்றை மாற்றி இயந்திரம் அமைத்துத் தேவியை வேதமுறைப்படி வழிபடும் தத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தவரும் ஆதிசங்கரரே.

சிவமும் சக்தியும் வேறல்ல. ஒன்றிலிருந்து ஒன்று மாறாத தன்மையு டையதாகக் காணப்படுகின்றது. அண்டங் கள் யாவும் சிவசக்திமயமாகவே காணப் படுகின்றன. சிவம் என்பது சேதனம்-அறிவுப் பொருள். சக்தி என்பது அசேதனம்-ஜடப் பொருள். இவை இரண்டும் இணைபிரியாது உலகெங்கும் காணப்படுகின்றன. மனித உடலிலும் சிவமும் சக்தியும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றது. உடல் அறிவில்லாதது, அசேதனம். அறிவின் வடிவாய்ப் பிரகாசிப்பது ஆத்மா. இரண்டும் இணைந்தே மனித வாழ்க்கை இயக்கமாக அமைகின்றது. உலகிலுள்ள யாவற்றிலும், எல்லா இயங்குவனவற்றிலும் இதனைக் காண்கின்றோம். நெருப்பும் ஒளியும், மழையும் குளிர்ச்சியும், மண்ணும் வளமும், பூமியின் சுழற்சியும் பருவமும், சிவசக்தி தத்துவத்தை இயற்கை மூலம் எடுத்துக் காட்டுகின்றது. சக்தியில்லையேல் சிவம் இல்லை. அதனால் தான் சக்தியற்றுச் செயலற்றுப் படுத்திருப்பவனைச் சிவனே என்று இருக்கின்றான் என்று கூறுவர்.

ஜடப்பொருளில் இயங்குகின்ற சக்தி ஒன்றுக்கொன்று உடன்பாடாய் இருக்கும்போது அதற்குக் கவர்ச்சி (Attraction) என்று பெயர். எதிர்மறையாய் இருக்கும்போது விலக்கு (Repulsion) என்று பெயர். ஜீவித தத்துவத்திலும் இதேபோல விருப்பும் வெறுப்பும் உள்ளன. இவை யாவற்றையும் கடந்து விளங்குவது அன்பு. இதுவே இறை வடிவாய்த் திகழ்கின்றது. "சக்தியாய் சிவமாய்" என்று சொல்லும் பெரியோர்கள் "அன்பே சிவம்" என்றும் கூறியுள்ளார்கள். சிவனைச் சக்திமான் என்ற பெயராலும் அழைப்பர்.

(தொடரும்....)

# தெய்வத் தொடர்பு பெற்று அமைதி பெறுவோம்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

இந்த உலகில் வாழுகின்ற மக்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் அமைதியின்றி இருக்கிறார்கள். குழப்பமில்லாதவர்களைக் காணமுடிவதில்லை. ஒவ்வொருவரும் ஏதோ தேவைகள், குறைபாடுகள் தமக்கு இருப்பதாக எண்ணுகிறார்கள். அவற்றை நிவிர்த்தி செய்துவிட்டால், நிம்மதி கிடைத்துவிடும் என்ற நோக்கில் அவை சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அவை அடையப்பட்ட பின்னருங்கூட அமைதியாக இருக்கிறார்களோ என்றால் அப்படியுந் தெரியவில்லை. விரும்பினவற்றைப் பெற்றுக் கொண்ட பின்னரும் அமைதியின்மை மேலும் கூடியுள்ளதேயன்றிக் குறைந்தபாடில்லை. இது ஒரு மர்மமாகவே எல்லோருக்கும் இருக்கிறது.

ஏழைக்கு, அடுத்தவேளை உணவு கிடைக்குமா கிடையாதா என்பதில் மனக்குழப்பம்? பணக்காரனுக்கோ தான் தேடிக்கொண்ட பெருவாரி பணத்தை எப்படிப் பாதுகாப்பது என்பதில் அமைதியின்மை, ஏழை நினைக்கிறான் பணம் உடையவன் அமைதியாக இருப்பான் என்று அதேவேளை பணக்காரன் நினைக்கிறான் ஏழைக்கென்ன கவலை, அவன் நிம்மதியாக இருப்பான் என்று. ஆனால் இருவரிடமும் அமைதியில்லை என்பதுதான் உண்மைநிலை.

உலகில் பணம், கல்வி, பதவி, அந்தஸ்து, அதிகாரம், புகழ், செல்வாக்கு என்பவற்றைப் பெற்றவர்கள் அவற்றிலும் தமக்குத் தேவையான அமைதி, சாந்தி, நிம்மதியைக் காண்கிறார்களில்லை. இவற்றினாலும் அமைதியின்மையை அடைந்ததுதான் மிச்சம் என்கிறார்கள்.

மனிதர்கள், தமக்கு இன்பந் தரும், அமைதியை ஏற்படுத்தும், எனக்கருதி முயன்று பெற்ற அனைத்தும் அவர்களுக்கு அமைதியைத் தருவதாக இல்லை. உண்மையைச் சொல்லப் போனால் அமைதியைக் குலைப்பனவாகவே வந்து விடுகின்றன. நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைத்து விடுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது. உண்மையில் அமைதியின்மைக்குக் காரணம் நாம் தெய்வத்தை நினைக்காமல் உலக இன்பங்களில் அளவுக்கதிகமாக ஆசை கொண்டமைதான். நாம் தெய்வத்தை நினைக்கா விட்டால், நாம் நினைத்ததற்கு மாறாகவே தெய்வம் நினைக்க நேரிடும் என்பதை நாம் உணர்தல் அவசியம். தெய்வத்தை விசாரித்து, அதன் ஒப்புதல் உடன் செய்யாத காரியம் ஒரு போதும் நல்லதாக அமையமாட்டாது. தெய்வத்தின் தொடர்பினைத் துண்டித்தலே மனிதரின் அமைதியின்னைக்கும், நிம்மதியற்ற தன்மைக்கும் காரணமாய் இருக்கிறதென்று சமயநெறிப்பற்றுடையோர், ஆன்மீகவாதிகள் மற்றும் அறிஞர்கள் என்போர் கூறுகின்றனர். அதுவே உண்மையுமாகும். மின்சக்தியைத் துண்டித்தால் மின்னொளி மறைந்து விடுகிறது. அவ்வாறுதான் தெய்வீக சக்தி துண்டிக்கப்பட்டதும், மனிதரில் அமைதி, நிம்மதி, சாந்தி என்பன முற்றிலாக அகன்று விடுகின்றது.

தெய்வீக அன்பின் அணைப்பில் மனிதர்கள் இருக்கும் வரை, அவர்களிடம் கவலைகள், கிலேசங்கள், அச்சங்கள், தொல்லைகள், குழப்பங்கள், கலக்கங்கள் போன்ற எவையும் அணுகமுடியாது. தெய்வீக அன்பு மனிதரின் மிகச் சிறந்த பாதுகாப்புக்கவசம். அதை அணிந்திருப்பவர்க்கு ஒரு பொல்லாப்பும் நேராது. ஆசைகள், அவாக்கள், வாஞ்சைகள், அங்கலாய்ப்புக்கள், ஏக்கங்கள் முதலிய அமைதியைக் குழப்பும் எதிரிகள் கிட்ட நெருங்கமாட்டா.

ஆசையே மனிதரின் தலையாய எதிரி. மனங்களை விகாரப்படுத்தி அலைக்கழிப்பது ஆசையே. மனக்குவிவு அல்லது மனத்தை ஒருமுகப்படுத்துதல் இல்லாதவர்க்கு அமைதி இருக்க முடியாது. அமைதியுள்ளவர்க்கே ஆனந்தம் உண்டு. முழுமையான அமைதியில் துன்பம், துயர்கள், கவலைகள், கஷ்டங்கள், எல்லாம் மாயமாய் மறைந்துவிடும். எங்கும், எதிலும், எப்போதும் ஆனந்தம் தான் பிரவாகிக்கும். வற்றாத ஊற்றாக ஆனந்தம் அமைந்துவிடும்.

எனவே, அநாவசிய ஆசைகள், அவாக்கள், நாட்டங்கள், என்பவற்றை ஒழியுங்கள். அதற்கு இறைவனின் திருவருளை நாடுங்கள். அப்பொழுது பூரண அமைதியைப் பெறுவீகள். யார் ஆசையிலும், காமத்திலும், அகந்தையிலும், பகைமையிலும், இருந்து விடுபட்டு, தூய மனத்தினராய்; நல்ல எண்ணங்கள், நற்செயல்கள் என்பவற்றில் ஈடுபாடு உடையராய் இருக்கின்றார்களோ அவர்களே நிரந்தர அமைதி, நிம்மதி, சாந்தி, என்பவற்றை அடையும் பேற்றினைப் பெறுபவர்கள் ஆகின்றனர்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## உறுதுணையாய்!

*அன்னையும் தொழுதனள்*
*அப்பனும் தொழுதனன்*
*நின்னையே நினைந்துருகி*
*வேண்டியே ஸ்ரீ துர்க்கா*
*என்னையும் ஈன்றனர் இவ்*
*அவனியில் வாழ்வாங்குவாழ - நானும்*
*உன்னையே தொழுதெழ என்றும்*
*உறுதுணையாய் நில்லம்மா*

**ஜெ. தவேதன்**
தொட்டிலடி.

சிறுவர் விருந்து

# செடிகொடியும் சொல்வழி கேட்கும்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! உங்களுக்கு வாழ்த்துக்கள்!

எல்லோரும் நலமாய் இருக்கிறீர்களா? புதுவகுப்பில் புதுப் பாடங்கள் படிப்பீர்கள். நல்லது. இன்றைக்கு மெய்ஞானம் விஞ்ஞானத்தில் கலந்திருப்பதைப்பற்றி ஒரு கதை கேளுங்கள். அமெரிக்க நாட்டில் செல்வி கரோலினா என்ற ஒரு தாவர இயல் ஆய்வாளர் இருந்தார். தாவரங்களைப் பற்றி ஆய்வு செய்து; கல்லூரிகளில் அவற்றை மாணவர்களுக்குப் போதிக்கும் பேராசிரியராகவும் இருந்தார்.

தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதைக்கண்டு பிடித்த ஜெகதீசசந்திரபோஸ் என்ற விஞ்ஞானி பிறந்த இந்திய நாட்டைப் பார்க்க செல்வி கரோலினா விரும்பினார். 1984ஆம் ஆண்டு இவர் இந்தியாவிற்கு வந்தார். இந்தியக் கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தார். வங்காளக்கிராமம் ஒன்றுக்கு இவர் சென்றபோது, அங்கே ஒரு கிருஷ்ணன் கோயில் வாசலில் பல பெண்கள் அமர்ந்து பஜனை செய்வதைக் கண்டார். அங்கிருந்த சில சிறுபிள்ளைகள் பஜனை பாடுவதும், இடையே இடையே பிராக்கு பார்ப்பதும் குழப்படி செய்வதுமாக இருந்தார்கள். இதை கவனித்த பாட்டி ஒருவர்,

‘பிள்ளைகளே! பகவான் நாமத்தை உரத்த குரலில் பாடுங்கள்; மனம் வைத்து இடைவிடாமல் பாடுங்கள்; உங்கள் பாட்டைக்கேட்டு, மரம், செடி, கொடியெல்லாம் சந்தோசப்படும். நம்மையெல்லாம் வாழ்த்தும் குழப்படி செய்யாமல் பாடுங்கள், என்று அந்தப் பிள்ளைகளை ஊக்கப்படுத்தினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த செல்வி கரோலினாவுக்கு வியப்பாகப் போய்விட்டது. பஜனை முடிந்தபின் அந்தப் பாட்டியிடம் போனார் கரோலினா. ‘பாட்டி உங்கள் பாட்டைச் செடி கொடியெல்லாம் கேட்கும் என்றீர்களே, அது உண்மையா? தாவரங்களுக்கும் நீங்கள் பாடுவது விளங்குமா?’ என்று கேட்டார்.

‘ரொம்ப நன்றாகவே கேட்கும். பகவானுடைய நாமங்களை இப்போ கேட்கின்ற இந்த மரஞ்செடி கொடியெல்லாம் அடுத்த பிறப்பில் உயர்ந்த பிறப்பு எடுக்கும்’ என்று உறுதியான குரலில் திடமாகக் கூறினார் பாட்டி. வியப்படைந்த அந்த தாவரவியல் விஞ்ஞானி தனது நாட்குறிப்பில் இதனைக் குறித்துக் கொண்டார். சில நாட்களின் பின் அவர் அமெரிக்காவிற்கு திரும்பிச் சென்றார்.

செல்வி கரோலினா ஒரு நாள் தமது வீட்டுத்தோட்டத்தை கவனித்துக் கொண்டிருந்தார். அவரிடம் ஏராளமான ரோஜாச் செடிகள் இருந்தன. அவற்றை சமமாக வெட்டி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். ரோஜாவின் முட்கள் அவருக்கு தொந்தரவாய்

இருந்தன. அந்த நேரம் வங்காளத்துக் கிராமத்துப்பாட்டி கூறிய கருத்து நினைவு வந்தது.

“ரோஜாச் செடிகளே! நான் உங்களிடம் வந்து விட்டேன். அன்பு மிகுந்த உங்களைத் தினசரி நன்றாகக் கவனிப்பேன். பாதுகாப்பேன். ஆகவே இந்த முட்கள் உங்களுக்கு இனித்தேவையில்லை” என்று கனிவுடன் செடிகளிடம் கூறினார். அவ்வாறே தினசரி காலையும் மாலையும் சொல்லிச் சொல்லி அந்தச் செடிகளை கவனித்துக் கொண்டார்.

வெட்டிய ரோஜாச்செடிகள் நன்கு குருத்து விட்டு செழிப்பாக வளர்ந்தன. நிறைய மொட்டுக்கள் அரும்பிக் கொத்துக் கொத்தாய்ப் பூத்தன.

ஆனால் ஒரு சிறிய மாற்றம் புதிதாக வளர்ந்த ரோஜாக்கிளையில் முட்கள் காணப்படவே இல்லை!

செல்வி கரோலினா வங்காளப்பாட்டியின் சொற்களில் இருந்த உண்மையை நேரில் கண்டார். அடிமரத்தில் முட்களோடும், முட்களே இல்லாத புதிய கிளைகளோடும் இருந்த அந்த ரோஜாச் செடிகளைப் படம் பிடித்தார். தான் கண்டு கேட்ட அனுபவத்தை அவற்றில் குறிப்பாக எழுதினார். அமெரிக்காவின் புகழ்பெற்ற விஞ்ஞான சங்கத்திற்கு அவற்றை அனுப்பினார். அந்தச் சங்கம் வெளியிடும் விஞ்ஞானச்சஞ்சிகையில் அந்தப் புகைப்படங்கள் கரோலினாவின் குறிப்புகளோடு பிரசுரமாகின. தாவரங்கள் கூட நல்லதைக் கேட்டால் நன்றாக வளரும். சரி கெட்டதைக் கேட்டால்? ஆகவே “நாம் நல்லதை நினைப்போம். நல்லதையே பேசுவோம்” என்று உறுதி மொழி எடுத்துக்கொள்வோமா?

**“இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று**” என்கிறார் வள்ளுவர்.

நல்லவை நடக்க - நல்லதையே பேசுவோம்.


**சிறுதகவல்கள்:**

1. **பஞ்சபூதத் தலங்களிலே காற்றுக்குரிய தலம்:**
   திருக்காளத்தி சுவாமிபெயர் - குடுமித்தேவர்.

**2. நடராஜமூர்த்தியின் சப்த ஏழு தாண்டவங்கள்:**

| | | |
|---|---|---|
| i. | சிதம்பரம்: | பொற்சபை - ஆனந்த தாண்டவம். |
| ii. | மதுரை: | வெள்ளிச்சபை - சந்தியா தாண்டவம் |
| iii. | திருநெல்வேலி: | தாமிரசபை - முனிதாண்டவம் |
| iv. | திருவாலங்காடு: | இரத்தினசபை - ஊர்த்துவதாண்டவம் |
| v. | திருக்குற்றாலம்: | சித்திரசபை - திரிபுர தாண்டவம் |
| vi. | திருப்புத்தூர்: | சிற்சபை - கௌரி தாண்டவம் |
| vii. | இருண்ட நள்ளிரவு: | ஆகாயம் - சங்காரதாண்டவம் |

**நன்றி அருட்சகோதரி ஜதீஸ்வரி**



தொடர் - 17

# கந்தபுராண சிறுவர் அமுதம்

மாதாஜி

## 51. முருகப்பெருமானின் பெருமை

போர் செய்யும் போது பானுகோபனும் வீரவாகுதேவரும் ஒருவருக்கொருவர் ஏவிய சிவப்படைக்கலங்கள் ஒன்றுடன் ஒன்று சீறி மோதின. இதன் பயனாக மலை, கடல், அண்டங்கள், அழிந்தன. மீண்டும் இவைகளை நிலைநிறுத்தியபின்னர், சிவப்படைக்கலங்கள் தங்களை ஏவியவர்களிடம் சென்றன. தனியொருவனாக நின்ற பானுகோபன் தனித்து வீரவாகுவுடன் போர் செய்தால் இறப்பது திண்ணம் என எண்ணினான்.இதனால் பானுகோபன் மறைந்து வான்வழி சென்றான். இதனை பூதசேனைகளும் வீரவாகு தேவரும் கவனிக்கவில்லை. பானுகோபன் தோற்று ஓடியதாக நினைத்தார்கள். பூதப் படைகள் பாசறைக்குச் சென்று விட்டன.

ஆகாயத்தில் மறைந்த பானுகோபன், இன்றும் நான் தோல்வியுடன் வீரமகேந்திரபுரி சென்றால் அவமானம். ஆகையால் பகைவரை மாயத்தால் வெல்ல வேண்டுமென நினைத்தான். உடனே பாட்டி மாயா கொடுத்த மாயப்படைக்கலத்தைக் கையில் எடுத்து “நீ ஒருவரும் அறியாமல் பகைவர்களின் உணர்வையும் அறிவையும் கெடுத்து வீரவாகுதேவருடன் நன்னீர்க் கடலுள் எறிவாய்” என்று ஏவி அனுப்பினான். பானுகோபன் கூறியபடி மாயப்படையானது பகைவர்களையும் வீரவாகுதேவரையும் மயக்கி நன்னீர் கடலுள் அமுழ்த்திக் காவல் இருந்தது.

பானுகோபன் வெற்றிப் பெருமித மகிழ்ச்சியுடன் தந்தையிடம் சென்று பணிந்து குனிந்து வணங்கினான். “இன்று நான் பலவாறாகப் போராடி வீரவாகுவையும் இலக்கத்தெண்மரையும் ஆயிரம் வெள்ளப்பகைவர் பூதசேனைகளையும் கொன்று குவித்து விட்டேன். இனிக் கவலையே வேண்டாம் அப்பா” என்று கூறினான். நாளையே தேவலோகம் சென்று இந்திரன், திருமால் பிரமா போன்ற தேவர்களையும் பிடித்து வந்து சிறையில் வைப்பேன் என்று பானுகோபன் கூறினான். சூரபன்மன், மகனின் வீரத்தைக் கேட்டு மகனைக்கட்டித் தழுவிக் கூத்தாடினான். இதனால் வீரமகேந்திரபுரி வெற்றிக் களியாடத் தொடங்கியது.

பானுகோபனின் மாயப்படையால் வீரவாகுதேவரும் பூதப்படைகளும் நன்னீர்க்கடலுள் ஆழ்த்தப்பட்ட செய்தியை, நாரதமுனிவர் கந்தப்பெருமானிடம் சென்று வணங்கி முறையிட்டான். கந்தவேள் வேலை நோக்கினார். வீரவாகு தேவர் பூதப்படைகளின் மயக்கம் நீங்கி அவர்களை இங்கு அழைத்துவா என்று வேலை முருகப்பெருமான் விடுத்தார்.

வேற்படை ஆயிரம் கோடி பிரகாசத்துடன் வருணன், அரி, அயன் முதலியோரின் படைகள் சேவித்து வர பலகடல், மலை, காடுகள், ஆறுகள் தாண்டி நன்னீர்க்கடலை அடைந்தது. வீரவாகு பூதசேனைகள் முதலியோரை, மாயைப்படையை அழித்து விட்டு முருகப்பெருமானிடம் அழைத்துச் சென்றது வேல். ஆனால் வீரவாகுதேவர் வேலுடன் முருகப்பெருமானிடம் செல்ல மறுத்தார். எவ்வாறாயினும் "பானுகோபனைக் கொல்வேன்" கொல்லாவிடில் வில்லடன் தீயில் வீழ்ந்து மாய்வேன் என்று சபதம் செய்தார்.

அப்போது நள்ளிரவு. பானுகோபன் கூறியவற்றைக் கேட்ட அவுணசேனைக்கள் வெற்றிக்களிப்பில் மதுவுண்டு கூத்தாடிக் கொண்டிருந்தனர். அந்த நேரம் பூதசேனைகள் கடல் உடைத்தாற்போல் ஆரவாரம் செய்தனர். அவுணர்கள் வானைப் பார்த்து வியர்த்தனர்.

வீரமகேந்திரபுரியின் மேற்கு வாயிலைப் புலிமுகன் காவல்காத்துக் கொண்டிருந்தான். அவன் மிகவும் கொடியவன். அறக்கடவுளையும் சிறையில் வைத்தவன். அவன் நால்வகைப் பூதசேனைகளை எதிர்த்தான். பூதசேனைகளின் தலைவனுமாகிய சிங்கனும், அசுரத் தலைவனாகிய புலிமுகனும் சூலங்களை ஏவி போர் செய்தனர். அப்போரின் முடிவில் சிங்கன் புலிமுகனைக் கொன்றான்.

பின்னர் பூதசேனைகள் வீரமகேந்திர நகருள் புகுந்து எரிமூட்டினார்கள். சிவபெருமானின் புன்முறுவலால் திரிபுரம் எரிந்ததுபோல் வீரமகேந்திர நகரமும் எரிந்து கொண்டிருந்தது. இதனைச்சூரபன்மன் அறிந்தான். கோபத்துடன் மேகங்களை அழைத்து நெருப்பினை அணைக்கும்படி பணித்தான். அவனது ஆணைப்படி ஊழிமேகங்கள் மழைபொழிந்தன. அதனால் தீ அணைந்தது.

மழைபொழிந்து தீ அணைந்ததைக் கண்ட வீரவாகுதேவர் அரக்கனின் மாயமென நினைந்தார். அப்போது நாரத முனிவர் அவ்விடம் தோன்றினார். சூரபன்மனின் கட்டளைக் கிணங்க ஊழிக்கால மேகங்கள் மழைசொரிந்து தீயை அணைத்தன. ஆகையால் "வீரரே வடமூகாக்கினிப் படையைச் செலுத்து" என்று கூறிவிட்டு மறைந்தார். வீரவாகுதேவர் வடமூகாக்கினிப் படையைச் செலுத்தினார். அப்படை விரைவாகச் சென்று மேகங்களின் நீரை உண்டுவிட்டு வீரவாகுதேவரிடம் வந்து சேர்ந்தது. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

நடந்தவற்றை அறிந்த சூரபன்மன் ஆறாத சீற்றம் கொண்டான். "நானே போருக்குச் சென்று வீரவாகுதேவர், கந்தன், பூதப்படைகள் யாவற்றையும் அழிப்பேனென்று சபதம் கூறிப் போருக்குப் புறப்பட்டான்.

அப்போது சூரபன்மனின் மகனாகிய இரணியன் எழுந்தான் அவனுக்கு மூன்று தலைகள் வஞ்சனைகள் மாயைகள் நிறைந்தவன். எனினும் நீதியுடையவன். இரணியன் தந்தையிடம் பேசலானான். "நாம் தேவர்களைச் சிறைசெய்தது பாவம். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆளும் ஆட்சியும், வரமும் சிவபெருமானிடம் தான் பெற்றிருக்கின்றீர்கள். அப்பரமேஸ்வரன் நம்மிடம் உள்ள தீமையின் காரணமாக அவ்வரங்களை மாற்ற

நினைப்பாராயின் அதன் பின் நம் சக்தியெல்லாம் எம்மாத்திரம்? நன்றி மறந்தவனைக் கொல்லக் கூற்றுவன் தேவையில்லை. அவன் மறந்த நன்றியே அவனை அழித்துவிடும்."

"அப்பா சிவபெருமானை எதிர்த்து யார்பிழைப்பார். மன்மதன் சிவபெருமானை எதிர்த்து எரியவில்லையா? சிரிப்பினால் முப்புரங்களை எரிக்கவில்லையா?, இப்படி எத்தனை எத்தனை? சிவனுடன் செருக்கடைந்த மாலயன் நிலை எப்படி முடிந்தது? முருகன் வேறு யாருமல்ல. சிவபெருமானின் சக்தியாகும்" எனப்பலவாறு இரணியன் சூரபன்மனுக்கு நீதியுரை எடுத்துக்கூறினான். "அப்பா முருகப்பெருமான் தன்னந் தனியனாக இருந்து எதையும் சாதிக்கும் வல்லமை உடையவர். அதனால் முருகப்பெருமானைச் சிறுவனென்று இகழாதே" என இரணியன் கூறுதலும் சூரபன்மன் ஆலகாலவிடம் போல இரணியனின் அறிவுரைகளை உதறித்தள்ளிச் சீறினான். கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. அறிவிலியே! நீ சிறுவனின் ஆற்றலைப் பற்றியும் தூதனின் வலிமை பற்றியும் கூறுகின்றாய். நான் செய்ய வேண்டுவது என்ன என்பது பற்றியும் சொன்னாய். இவற்றையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொடுத்தவர் யார்? சொல். அவனைக் கொல்லுகிறேன் அவன் குலத்தையே அழிக்கிறேன். இன்னோர் முறை இப்படி நீ கூறினால் உன்னையும் கொல்வேன் என்று கர்ச்சித்தான் சூரபன்மன்.

(தொடரும்.....)

## "சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்பிதழ்"



கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி வரும் துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாகத் தை 2005 "**சிவத்தமிழ்**" சிவத்தமிழ்ச்செல்வியின் சிறப்பிதழாக மலர்கிறது.

சிறப்பிதழுக்கு அவர்தம் சேவையை கவிதையாகவோ கட்டுரைகளாகவோ எமக்கு 01-10-2004 முன்னதாக அனுப்பி வைக்கவும். இலங்கையில் வசிப்பவர்கள், கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். ஏனையோர் நேரடியாகச் சிவத்தமிழ் முகவரிக்கும் அல்லது மின்னஞ்சலுக்கும் அனுப்பிவைக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

**இலங்கை**
**Dr. Vani, Sivarajan**
118 Vivekananda hill,
colmbo 13
Sri-lanka.

**சிவத்தமிழ்**
Dr. M. K. S. Sivakumaran, B. F. A
Postfach 2765
**58477 Lüdenscheid**
Germany.

Vettimaniy@hotmail, com

# சுந்தரர் பாடல்களில் சிவனருட் பொலிவு

சைவப்புலவர்
**செல்வி ப. உருத்திராதேவி அவர்கள்**

**சை**வசமய குரவர்களில் மூன்றாவதாகத் திகழ்பவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவார். இவரின் வாழ்க்கை ஏனைய நாயன்மார்களின் வாழ்க்கையினின்றும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. இளவயதிலேயே செல்வச் செழிப்பில் வாழ்ந்த இவர் இன்ப நாட்டமும் சுகபோக வாழ்வில் ஈடுபாடும் உடையவராகக் காணப்பட்டார். இவரின் திருமணம் தடைப்பட்டதிலிருந்து இறைபக்தி மிக்க அடியவராக மாறி இறைவனைத் தோழமை நிலையில் வழிபட்டாலும் உள்ளத்தால் இறைவனதும் அவனது அடியவரதும் அடிமையாக இருப்பதையே சுந்தரர் பெரிதும் விரும்பினார்.

அரியும், அயனும் கண்டறியாத சிவன்

சுந்தரரை நோக்கி

**"அர்ச்சனைப் பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் தம்மைச் சொற்றமிழ் பாடு"** எனப் பணித்தார். **சுந்தரரும்** "பித்தா பிறை சூடி" என்று மடைதிறந்த வெள்ளம்போல் தமிழ்த்தேனமுத வெள்ளம் அணைகடந்து பெருகப் பாடத் தொடங்கினார். சுந்தரரின் தமிழ்ப் பாடல்களால் ஈர்க்கப்பட்ட சிவன் இவரின் பாடல்களின் பெருமையை சேரமான் பெருமாளுக்கு உணர்த்தத் திருவுளம் பூண்டார். சேரமான் பெருமாள் தினமும் சிவபூசை செய்வது வழக்கம். சிவபூசையின் முடிவில் இறைவன் நடனமிடும் சதங்கையின் ஒலிச்சத்தம் "கிண் கிண்" எனக் கேட்ட பின்னரே சேரமான் சிவபூசையை முடிப்பது வழக்கம். ஒருநாள் சேரமானுக்குச் சிவபூசை முடிவில் சிலம்பொலி கேட்கவில்லை. இதனால் பெரிதும் கவலையடைந்தார். இனி இந்த உடம்பு எதற்கு? உயிருடன் இருப்பதில் பயனென்ன? "ஆளும் நாயகனே கேளும் கிளையும் இருந்தென்ன பயன் மாளுவேன்" எனத் துணிந்தார். இறைவனைப் பணிந்து உறைவாளை உருவி மார்பில் நாட்ட முயன்றார். அப்போது கலீர் கலீர் எனச் சிலம்போசை கேட்டது. சேரமான் அதைக்கேட்டு உள்ளம் உருகினார். சேரமான் "ஐயனே அருட்கடலே சிலம்பொலி முன்கேளா தொழிந்த காரணம் யாதோ? என்று கேட்டார். சேரனே நாம் தடுத்தாட்கொண்ட சுந்தரன் தில்லையில் வந்து நம்மை வழிபட்டுச் செந்தமிழ்ப் பதிகம் பாடினான். நாம் அப்பாடலின் சுவையில் ஈடுபட்டிருந்தமையால் உன் சிவபூசை முடிவில் சிலம்பொலி தரச் சற்றுத் தாமதமாகியது. வருந்தற்க" என்று அசரீரியாக இறைவன் கூறியருளினார். இதனால் சுந்தரரின் பெருமை தமிழ்ப்பாடல்களின் இனிமைகளை அறிந்து ஆரூரருக்கு நண்பரானார் எனப் பெரிய பராணம் கூறுகின்றது.

சிவனையே தோழனாகக் கொண்டு அவனருகிலிருந்து அவனது உருவப்பொலிவைக்கண்டு மகிழ்ந்தவர் சுந்தரர். "நான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என நாமும் அவர் கண்ட சிவனருட்பொலிவைக் காணுமாறு காட்டுகின்றார். இறைவனின் திருமுடி, திருமுகம், திருமேனி, திருவுடை, திருவாபரணம் என்பவற்றையெல்லாம் தனது பாடல்கள் மூலம் படம்பிடித்துக் காட்டுகின்றார் சுந்தரர்.

திருமுடிபற்றிக் குறிப்பிடும் போது சிவனின் அழகிய சடையையும் அதில் அணிந்துள்ள கொன்றை பிறைச்சந்திரன் கங்கைநாகம் என்பன பற்றியும் பல பாடல்களில் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாக "செம்பொன் நேர்சடையாய்" எனவும் "மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே" எனவும் "மருவார் கொன்றை மதிசூடி" எனவும் "பேழைச் சடைமுடிமேற் பிறை வைத்தான்" எனவும் "பிறையாருஞ் சடையாய்" எனவும் "எரியார் புன்சடைமேல் இளநாகம் அணிந்தவனே" எனவும் "திங்கள் சடைக்கு அணிந்தீர்" எனவும் "வாள் அரா மதிசேர் சடையானை" எனவும் பாடுகின்றார். கழுத்துப் பற்றிக் குறிப்பிடும்போது "கரியகறைக் கண்டன்" எனவும் "காராரும் மிடற்றாய்" எனவும் "மையார் கண்டத்தினாய்" எனவும் "மையாரும் மிடற்றாய்" எனவும் போற்றுகின்றார்.

சிவனின் திருமேனி பற்றிக் குறிப்பிடும்போது "பொன்னார் மேனியனே" எனவும் "தழல் போலுந் திருமேனி" எனவும் "பொன் செய்த மேனியினீர்" எனவும் அவனது மேனியழகை வர்ணிக்கின்றார். இறைவனின் உடையைப் பற்றிக் கூறும்போது "புலித்தோலை யரைக்கசைத்து" எனவும் "கரியாய் ஈர்உரியாய்" எனவும் "மதமாவுரி போர்த்தவனே" எனவும் "மதகரியுரிபோர்த்து" எனவும் "மத்தம் மதயானை உரிபோர்த்த மணவாளன்" எனவும் "கடமார் களியானை யுரியணிந்த கறைக்கண்டன்" எனவும் போற்றிப் பாடியுள்ளார். சிவன் அணிந்துள்ள ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடும் போது "குண்டலம் திகழ் காதுடையானை" எனவும் "சங்கவெண்குழை காதுடையானை" எனவும் "விளங்குகுழைக் காதுடையானை" எனவும் பாடி காதில் தோடு அணிந்துள்ளான் என்பதைக் காட்டுகின்றார். மேலும் "நரியாருஞ் சுடலை நகுவெண்டலை கொண்டவனே" எனவும் "செத்தார் தம் எலும்பணிந்து சேவேறித்திரிவீர்" எனவும் பாடுவதன் மூலம் மண்டையோட்டு மாலை அணிந்துள்ளான் என்பதைக் குறிப்பிடுகின்றார். இறைவன் தன் கைகளில் மான், மழு என்பவற்றை ஏந்தி உள்ளார் என்பதை "வடிவுடைமழுவேந்தி" எனவும் "வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை" எனவும் "மழுவாள் வலனேந்தீ" எனவும் பாடுகின்றார்.

சுகபோகத்தில் வாழ்ந்த சுந்தரரைத் தடுத்தாட் கொண்டு அவரின் பாடல்களின் பெருமையை உலகறியச் செய்த சிவனைத் தோழமை நெறியிலே நின்று வழிபட்ட சுந்தரர் தாம் அருகிருந்து கண்டவற்றைத் தமது பாடல்கள் மூலம் நாமும் காணுமாறு காட்டுகின்றார். இவர் பாடல்களைப் பாடி இறைவனை நெஞ்சிலிருத்தி அவனருள் பெறுவோமாக.

**"அருள் ஒளி" வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்**

**"அருள் ஒளி"** மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான தரமான, ஆக்கங்களைநாம் எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி:

**ஆசிரியர்:**
**"அருள் ஒளி"**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

**ஆசிரியர்:**
**"அருள் ஒளி"**
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

# துர்க்கையின் திருவடி பணிமனமே

துர்க்கையென் றால்துயர் விலகி மறைந்திடும்
சொல்லிடு வாய்மனமே
தூயவள் இவள்திரு அடிமலர் பணிந்திட
துயர்பல விலகிடுமே
கூர்படு சூலம் ஏந்தியே நடனம்
புரிந்திடும் அன்னையிவள்
குவலயம் மீதெமைக் காத்தருள் அன்னைபொன்
அடியினைப் பணிமனமே.

தெல்லியம் பதியினில் நல்லருள் சிந்தியே
தேசுடன் நடமிடுவாள்
தேடியே வந்துதன் திருவடி பணிவார்
துயர்கெடச் செய்திடுவாள்
எல்லையில் காவல் கொண்டெமை ஆள்வாள்
எழில்நடம் மிகுபுரிவாள்
என்றுமே எம்மைக் காத்திடக் கையில்
சூலமு டன்னொளிர்வாள்

துட்டரை வீழ்த்தி துயர்பல நீக்கி
தூயநல் ஒளிதருவாள்
துணையெனத் தன்னடி பணிந்திடு வார்வினை
மாற்றியே மகிமைசெய் வாள்
பட்டர்பி ரானிவள் அடியினைப் பணிந்திட
பார்புகழ் நிலவுதந்தாள்
பாரினில் எமக்குறு துணையென விளங்கிட
பளிங்குறுச் சிலையானாள்

மஹிஷனை அழித்துயர் மகிமைசெய் தாளன்னை
மஹிஷ மர்த்தனியே
மனத்துயர் விலக்கியே தேவரைக் காத்தநல்
மகிமைக் குரியவளே
அகிலமும் புகழும் ஆதிப ராசக்தி
அங்கயற் கண்ணியளே
அநுதின மும்முனை பணிந்து வணங்கிட
அருளொளி தருவாயே

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
வாள்திரி சூலம்கதை
அங்கையில் ஏந்தியே அருளொளி காட்டும்
அன்னைஸ்ரீ துர்க்கையளே
பொங்கும் துயரம் போக்கியே எமையாள்
பொற்புமி குந்தவளே
சிங்கமதில் ஒளி தந்துமே எமைநிதம்
காத்தருள் புரியுமம்மா

வெற்றி நலந்தரும் கொற்றவை நீயே
வேண்டும் வரமருள்வாய் எங்கள்
வேதனை யாவையும் நீக்கியே நல்லருள்
ஒளிநலம் மிகுதருவாய்
சொற்றமிழ் மாலைகள் பாடியே துதித்திட
சோகவி னையறுப்பாய்
துயர்கெட வாழ்வினில் நல்லருள் சிந்தியே
சுகமுறு நிலையருள்வாய்

அன்னையென் தாயே அருள்விழி காட்டும்
ஆதிப ராசக்தி
அவனியில் பீதி நிலைகெட அருள்புரி
ஆனந்த ரூபிணியே
உன்னடி பணிந்தேன் உளமது இரங்கி
உயர்வழி காட்டுமம்மா
ஊறுசெய் கோலம் யாவும கன்றிட
அருளொளி கூட்டுமம்மா

தேவியே எம்மை ஆண்டருள் புரியும்
தேசுமி குந்தவளே
தெல்லியம் பதியுமு கொடையினில் அருளொளி
நலம்தந் தாள்பவளே
பாவியென் இதயப் பளுவினை நீக்கியே
பசுமைநி லைதருவாய் உனைப்
பாடியே பணியும் அன்பர்தம் நெஞ்சினில்
நித்தமும் ஒளிதருவாய்.

கவியாக்கம்:
**சு.குகதேவன்** தெல்லிப்பழை.

(சகலமும் அருளும் சனீஸ்வரபகவானே! என்னும் தலைப்பில் ஞானபூமி இதழில் 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தென்னிந்தியா பொன். பாஸ்கரமர்த்தாண்டன் எழுதிய கட்டுரையின் இரண்டாம் பகுதி **"அருள்ஒளி"** வாசகர்கள் வாசித்துப் பயனடைய மறு பிரசுரம் செய்யப்படுகிறது.)

# சகலமும் அருளும் சனீஸ்வர பகவானே!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அவையாவன:

திருவாரூர்-ஒன்று. இங்கே ஈசன், தியாகராஜா பெருமான். வீதிவிடங்கத் தியாகராஜா என்றும் அவருக்குப் பெயர். இவர்தான் இந்திரன் பூஜித்த முதல் சிவலிங்க பெருமான். இவர் ஆடும் நடனம், 'அஜபா நடனம்' என்று போற்றப்படும். அதாவது: நாம் மூச்சு இழுக்கும்போதும் விடும்போதும் இதயம் அடையுமே அப்படி திருநடனம் செய்வது.

இன்னொரு தலம்: திருவாய்மூர். இங்கே சுவாமியின் பெயர் நீலவிடங்கத் தியாகராஜர். இத்தலத்தில் தியாகராஜப் பெருமான் ஆடும் நடனம், கமல நடனம். அதாவது தாமரை நீரின் அசைவுக்கேற்ப பக்கம் விழாமலும் நிலை பெயராமலும் ஆடும் நடனம்.

அடுத்த தலம் திருக்காறாயில். இங்கே 'ஆதிவிடங்கத் தியாகராஜர்' என்பது ஈசனின் திருநாமம். இத்தலத்தில் அவர் ஆடும் திருநடனத்தின் பெயர் குக்குட நடனம். 'குக்குடம்' என்றால் கோழி. கோழி நேரோட்டமாகவும் பக்க ஓட்டமாகவும் ஓடுவதுபோல் ஆடும் நடனம்தான் குக்குட நடனம்.

மற்றொரு தலம் திருக்குவளை.... 'அவனி விடங்கத் தியாகராஜர்' என்று இங்கே பெயர் கொண்டிருக்கிறார் பெருமான். இங்கே அவர் ஆடும் திருநடனமாவது, பிரம நடனம். அதாவது பூவினை வண்டு சுற்றிச் சுற்றி வந்து மலரின் மேல் இருப்பது போல் சுழன்று சுழன்று ஆடி நிலைக்கு வரும் நடனம்.

திருநாகை (நாகபட்டினம்) இன்னொரு தலம். இங்கே சுவாமியின் திருநாமம் சுந்தரவிடங்கத் தியாகராஜர். இத் தலத்தில் எம்பெருமான் ஆடும் நடனம், பராவார தரங்க நடனம். அதாவது, கடல் அலை போல் மேலே எழுந்து முன் பக்கம் சுருண்டு மடங்கி விழுந்தாடும் திருநடனம்.

அடுத்த தலம் திருமறைக்காடு (வேதாரண்யம்) இங்கே 'புவனி விடங்கத் தியாகராஜர்' என்பது ஈசனின் திருநாமம். இங்கே அவர் ஆடுவது ஹம்ச நடனம். அதாவது அன்னம் போல் மெல்ல மெல்ல திருமேனியை அசைத்துச் செய்யும் நடனம்.

இந்த ஆறு சப்தவிடங்கத் தலங்களோடு ஏழாவதாக பெருமை பெற்றிருக்கும் இன்னொரு சப்தவிடங்கத் திருத்தலம் தான்.

இதோ, நாம் சேவித்து நிற்கும் இந்தத் திருநள்ளாறு. இங்கே ஈசனின் திருநாமம். நகவிடங்கத் தியாகராஜர். ஆடும் நடனம், உன்மத்த நடனம். 'நகவிடங்கம்' என்பதற்கு மலைமேல் விளங்கும் சுயம்பு மூர்த்தி என்று பொருள். சீலம் மிக்க சிவனடியார்களின் மனமாகிய மலைமீது நின்று ஞானமாகிய உன்மத்த ஸ்திர நிலை நடனம் ஆடும் ஈசனாக இங்கு எழுந்தருளியிருக்கிறார் எம்பெருமான்.

இவ்வாறு விண்ணவர்கோன் கொண்ட பொய்மையையும் வென்று இறையருளுக்கே சான்றாக பூவுலகில் அமைந்த ஏழு சப்தவிடங்கத் திருத்தலங்களுள் ஓர் அரிய திருத்தலமாகத் திகழ்வது இந்தத் திருநள்ளாறு.

இவ்வாறு பொய்மையைப் போக்கியது மட்டுமா?

சிவநெறி என்னும் மெய்மையையும் நிலைபெறச் செய்த பெருமை இந்தத் தலத்துக்கு உண்டு.

அந்த வரலாறு இது..................

இது, வரலாற்றுக் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி.

அப்போது மதுரையை ஆண்ட 'நின்ற சீர் நெடுமாறன்' என்ற பாண்டிய மன்னன் சைவநெறியிலிருந்து மாறி சமண மதத்தைத் தழுவினான். அதனால் நாட்டில் பல ஆன்மீகக் குழப்பங்கள் சம்பவித்தன.

இந்த நிலையைப் போக்கி, ஆதிமதமான சிவநெறியின் மேன்மையை மன்னனுக்கு உணர்த்தி, அவனை சைவத்துக்கு திரும்பச் செய்ய வேண்டும் என்று ராணி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் விரும்பினார்கள்.

அதற்காக சோழநாடு வந்து, அங்கு சமயப்பணி ஆற்றிக் கொண்டிருந்த திருஞானசம்பந்தரைப் பணிந்து மதுரைக்கு வருமாறு அழைத்தனர்.

சம்பந்தரும் உடனே அங்கு சென்றார்.

மதுரைக்கு சம்பந்தர் வந்ததும், அவரை அவமானப்படுத்தி சைவ மதத்தின் பெருமையையும் சிறுமைப்படுத்தத் திட்டமிட்டனர். அங்கிருந்த சமணத்தினர்.

அதற்காக சைவம் பெரிதா, சமணம் பெரிதா என்ற வாதத்துக்கு சம்பந்தரை இழுத்தனர்.

வாதம் என்பது அக்காலத்தில் அனல்வாதம், புனல்வாதம் என்று பல வகைப்படும்.

புனல்வாதம் என்பது தண்ணீரில் ஏடுகளை இட்டு, அவற்றில் எந்த ஏடு எதிர்த்து வருகிறதோ, அதையே வென்ற கட்சியாகக் கொள்வது.

அனல்வாதம் என்பது, நெருப்பை வளர்த்து அதில் போட்டியிடும் ஏடுகளைப் போடுவது-தீயில்பட்ட ஏடுகளில் எவை எரியாமல் இருக்கிறதோ, அவை சார்ந்திருக்கும் மதமே வென்ற கட்சியாகக் கொள்ளப்படும்.

அதன்படி

இப்போதும் சம்பந்தருக்கும், சமணருக்குமிடையே அனல்வாதம் தொடங்கியது.

முதலில் சமணர்கள் தம் மதத்தின் பெருமையைக் கூறும் ஏடுகளை தீயில் இட்டனர். அவை எரிந்து போயின.

அதன்பின் சம்பந்தர் பெருமான் வாதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டார்.

கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த அக்னி முன் அமர்ந்தார் சம்பந்தர்.

அவர் அருகே, சிவநெறி தழைக்க அவர் பாடிய தேவாரப் பதிகங்கள் கொண்ட ஏடுகள் இருந்தன.

அவற்றை எல்லாம் எடுத்து அனலில் போடுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அவரோ அந்த ஏடுகளுக்குள்ளிருந்து ஒரே ஒரு ஏட்டை மட்டும் எடுத்து அனலில் போட்டார்.

அந்த பதிகமோ அனலிலும் வேகாது. பச்சை பசுமையாய் தகதகத்தது.

அதன் காரணமாக அனைவரும் வியந்து போற்றி-சைவத்தின் பெருமையை ஏற்று பூஜித்தனர். அரசன் மனம் நெகிழ்ந்து சைவசமயத்தை தழுவினான்.

அப்படி அற்புதத்தை நிகழ்த்திய மகாசக்தி வாய்ந்த அந்த ஒரே ஒரு பதிகம் எது தெரியுமா?

அதுதான்,

இந்தத் திருநள்ளாறு தலத்து இறைவனையும் அம்பிகையையும் போற்றி சம்பந்தர் பாடிய இந்த பதிகம்.........

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்.

பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே!

ஆம் இந்த திருத்தலத்து அம்மையப்பர்களைப் பற்றி சம்பந்தர் பாடிய திருநாமப் பதிகம் ஒன்றாலேயே சைவ சமய நெறி என்னும் சத்தியம் நிலைபெற அது மெய்ப்பிக்கப்பட்டது.

இப்படி
பொய்மை அகலவும்.......
சத்தியம் நிலைபெறவும்

அருளாய் நிறைந்த இந்த திருத்தலமே. தீராத வல்வினை போக்கிடும் பாபவிமோசனத் திருத்தலமாகவும் திகழ்கிறது.

ஆம் நல்லவை அல்லவை அனைத்தும் தரும் சனீஸ்வர பகவான், நல்லதை மட்டுமே அருள கருணை கூர்ந்து நிற்பதுவும் இந்தத் திருநள்ளாறு திருத்தலமே.

அப்படி சனீஸ்வர பகவானின் கருணை நமக்குக் கிட்ட மூலகாரணமாகத் திகழ்ந்தவன் நளமகாராஜன்.

அந்தச் செய்தி.......

திரேதா யுகத்தில்.......

மிதிலையில் மைதிலியைக் கரம்பிடிக்க தசரத புத்திரனான தாசரதி, ஜனகன் வைத்திருந்த வில்லை வளைத்தான்.

அப்போது ஸ்ரீராமன் வெற்றி பெற்றான் என்பதைப் புரிந்து கொண்டு சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்கள் சந்தோஷப்பட்டனர். அதே நேரத்தில் தங்களால் இயலாமல் போனதே என்று மனதிற்குள் கவலையடைந்தனர்.

அதற்காக ஸ்ரீராமனை பழி தீர்க்க எவரும் முனையவில்லை!

அதுபோல் துவாபர யுகத்திலும்

துருபதனின் திருமகளான திரௌபதியைக் கரம் பிடிக்க பற்குணன் தனது திறமையைக் காட்டியபோதும் அங்கு சூழ்ந்திருந்த மற்றவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர்.

அப்போதும் பற்குணனைப் பழி தீர்க்க முனையவில்லை.........

ஆனால் கலியுகத்திலோ? சுயம்வர மண்டபத்தில் ஒரு சுந்தர புருஷன் வெற்றி பெற்று அந்நாட்டின் சுந்தரியைக் கரம்பிடித்ததற்காக மற்றவர்கள் அவனைப் பழிதீர்த்துக் கொண்டனர்.......!

அந்த சம்பவத்திற்குரிய நாயகன்தான்.

நிடத நாட்டை ஆண்டு வந்த நளச்சக்கரவர்த்தி.

விதி பலருக்கு பல ரூபத்தில் வேலை செய்யும்.

இந்த நளச்சக்கரவர்த்திக்குத் திருமண(ம்) ரூபத்தில் வேலை செய்துவிட்டது.

(அடுத்த இதழில் தொடரும்.........)

# இந்திரன் செய்வித்த அர்ச்சனை

ஆ. கதிரமலைநாதன் அவர்கள்

கலியுகத்திலே தேவேந்திரன் தான் அசுரர்களினால் அடைந்த பலவித துன்பங்கள் யாவும் நல்லபடியாகவே முடிந்ததனை உணர்ந்து, அதற்கு நன்றியாக லோகமாதாவாகிய அம்பாளுக்கு நன்மலர்களைக் கொண்டு தேவ குருவான வியாழபகவானின் தலைமையில் தேவலோக சிவாச்சாரியர்களின் உதவியுடன் அர்ச்சனை செய்விக்க எண்ணங் கொண்டான்.

தேவலோகமே விழாக்கோலம் கொண்டது. தேவலோகத்து மலர்கள் வாடாத்தன்மை உள்ளவையாகையினால், பூலோகத்துக்குத் தனது தூதுவர்களை அனுப்பி நான்கு வகையான அழகிய - வாசமலர்களை ஏராளமாக வருவித்திருந்தான்.

அதுமட்டுமன்றி அம்பாளின் அர்ச்சனையின் போது செய்யப்படும் உபசாரங்களின் பொருட்டு பொன்னாலான பல்வகைத் தீபக்கால்கள், குடை, கொடி, ஆலவட்டம், சாமரை, தீர்த்தக்கெண்டி போன்றவற்றினையும் தேவ தச்சனைக் கொண்டு புதிதாகச் செய்வித்திருந்தான்.

திடீரென அம்பாள் அர்ச்சனைக்கு வருகை தந்து தானே அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென்ற செய்தியினைத் தனது சேடிகள் மூலம் இந்திரனுக்கு சொல்லி அனுப்பினாள். என்றாலும் தனது ஏற்பாடுகள் எதுவும் பிழைத்துப் போகக் கூடாதென்ற நோக்கில் அம்பாளைப் போன்றே அழகிய பொற்சிலை ஒன்றினையும் செய்வித்து, அச்சிலைக்கு மிகவும் ஆடம்பரமான முறையில் பூசைகளை நடாத்திக் கொண்டிருந்தான்.

தேவேந்திரன் அம்பாளுக்கு பூசை செய்விப்பதனைக் கேள்வியுற்ற வசிட்டமுனிவர் மிக்க மகிழ்ச்சி பொங்க தேவலோகம் வருகை தந்தார். கலகப்பிரியனான நாரதமகரிஷி அவரை பூசை நடைபெறும் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார். தனக்கு இது பற்றி ஒரு வார்த்தை தானும் செப்பாதது பற்றி தேவேந்திரன் மீது அவருக்கு மனதில் உறுத்தல் இருந்தாலும், அம்பாளின் பொருட்டாக இதனை அவ்வளவு பெரிதுபடுத்த முனையவில்லை. அம்பாளின் அழகொழுகும் உருவச்சிலை அவரது மனதினைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

எவ்வாறாயினும் பூசை முடிந்ததும் தேவேந்திரனுக்கு ஆசி கூறிவிட்டு, அம்பாளை ?நேரடியாக சந்தித்துத் தேவேந்திரனது பூசையின் சிறப்பினையும் அவள் நேரடியாக பிரசன்னமாகி ஏற்றுக்கொள்ளாத காரணத்தை அறிந்து கொள்வதற்காகவும் அவளது மாளிகை நோக்கிச் சென்றார்.

ஆனால் நுழைவாயில் காப்போரினால், உட்செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டார். காரணம் கேட்டபோது, அம்பாளின் தேகத்தில் அங்கும் இங்குமாக தொப்புளங்கள் தோன்றியிருப்பதாகவும், அத்தோற்றத்துடன் கூடியவரை தன்னைக் காண வருபவர்களைச் சந்திப்பதனை தவிர்த்துக் கொள்ளவேயாகும் எனவும் குறிப்பிட்டனர்.

இவ்வளவு தூரம் வந்தும், அம்பாளை நேரடியாகத் தரிசிக்காமல் போவது அவருக்கு பெரும் மன உளைச்சலைக் கொடுத்தது. எனவே தான் வந்திருப்பதனை அம்பாளுக்குச் சொல்லி அனுப்பி வைத்தார்.

முனிவரின் மனம் நோகாதிருப்பதற்காக அம்பாள் அவரைச் சந்திக்கின்றாள். முதலில் உடல்நிலை பற்றி விசாரித்த போது, இவ்வருத்தத்திற்குப் பரிகாரமாக பூலோகத்தில் வசிக்கும் ஒருவரைப் பார்த்து வருவது பொருத்தமானதாயிருக்கும் எனச் சுருக்கமாகச் சொல்லுகின்றாள்.

தூதுவர் மூலம் சகல விபரங்களையும் அறிந்து கொண்டு பூலோகம் சென்ற முனிவருக்குப் பெரும் அதிர்ச்சியே காத்திருந்தது. ஏனெனில் குறிப்பிட்ட அந்நபர் ஒரு எளிமை மிகுந்த பக்தராக காணப்பட்டாரே தவிர, அவரது குடிசையில் எவ்வித மருந்துப் பொருட்களையோ அல்லது மருந்து குடுவைகளையோ கருவிகளையோ காணமுடியவில்லை.

ஆயினும் அக்காலை வேளையிலும் மிக ஆசாரமாகவே அம்பாளின் விக்கிரம் ஒன்றினை நீராட்டி மிகுந்த பக்திச் சிரத்தையுடன் தனது கையினாலேயே ஆய்ந்து எடுக்கப்பட்ட மிகச் சில மலர்கள் - பச்சிலைகளைக்கொண்டு பூசை செய்து கொண்டிருப்பதனை மட்டும் அவரது கண்கள் கண்டு கொள்ளத் தவறவேயில்லை.

எதுவுமே புரியாத முனிவர் தேவலோகம் திரும்புகின்றார். அவரது கண்களையே நம்பமுடியவில்லை. அம்பாள் சிறுமியாக கால்களில் சலங்கைகள் கொஞ்ச ஓடி வந்து வரவேற்கின்றாள்.

இப்போது மனம் திறந்து காரணத்தை அவளிடமே கேட்கின்றார் முனிவர். அம்பாள் விளக்கம் சொல்லுகின்றாள்.

- தான் செய்யும் பூசை பற்றி மட்டுமே மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான்.
- அம்பாளது அருட் கருணையிலும் பார்க்க மற்றவர்களின் புகழ்ச்சி பற்றியே தன்னை மறந்திருந்தான்.
- பூசைக்கு வைத்திருந்த மலர்கள்-பச்சிலைகள் எதிலுமே அவனது தொடர்பு ஏன் எண்ணம் கூடப் பட்டிருக்கவில்லை.

அர்ச்சனையை ஏற்றுக் கொள்ளாதது நியாயமாக இல்லையா?

*

# நல்லூர் கந்தசுவாமி கோவில்

**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

**சை**வ உலகில் "கோயில்" என்றால் சிறப்பாகக் கருதப்படுவது "சிதம்பரம்" என்னுந் திருத்தலமேயாம். அதேபோன்று இன்று ஈழத்தில் கோயில் என்றால் சிறப்பாகக் கருதத்தக்கது **நல்லூர்க்கந்தசுவாமி** கோயிலேயாகும்.

நல்லூர் யாழ்ப்பாணப் பட்டனத்திலுள்ள ஓர் ஊர். ஆரியச் சக்கரவர்த்திகள் என்று கூறப்படும் யாழ்ப்பாணத் தமிழ் அரசரின் அரசிருக்கையாகப் பன்னெடுங் காலம் பேர் புகழுடன் விளங்கிய ஊர். **ஆரியச்சக்காரவர்த்திகள் சைவசமயிகள்.** இவர்களது அமைச்சர்களும், குடிமக்களும் சைவசமயிகளாகவே இருந்தனர். இதனால் இம்மன்னர்கள் தங்களதும், தங்கள் மக்களதும் சமயக் கடமைகளை நிறைவேற்றுதற்காகத் தங்கள் அரணைச் சுற்றியும், சுற்றுப்புற ஊர்களிலும் பல சிவாலயங்களைக் கட்டுவாராயினர். வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாய நாதர் கோயில், சட்டநாதர் சிவன் கோயில், வீரமாகாளியம்மன் கோயில்,அரசகேசரி என்ற அமைச்சரால் கட்டப்பட்ட நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் கோயில் போன்றவை இவர்கள் கட்டிய கோயில்களுட் சிலவாகும். இவ்வாறு இவர்களினால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் பரிவார தேவகோட்டங்களும், சிறந்த யாக மண்டபங்களும், களஞ்சியம், மடைப்பள்ளி, திருக்குளம் முதலியனவும், சித்திரக்கோபுரங்களோடு மதில்களும், நந்தவனம், அந்தணர் தங்கும் இடங்களும், வேதாத்தியயன மண்டபம், அன்னதான சத்திரங்கள், தேரும் தேரோடும் வீதிகளும் அமைந்திருந்தனவாம். இவற்றோடு நான்மருங்கும் தாமரைத் தடாகங்களும், அவைகளைச் சுற்றிச் சிறந்த படித்துறைகளும், அவைகளுக்கு அருகே தோரண மண்டபமேடைகளும், இடையிடையே சிறந்த மரக்காக்களும் அமைப் பித்துத் தேவநகராக நல்லூரை எழில்பெற இவர்கள் அக்காலத்தில் வைத்திருந்தனர். இப்படியாக மன்னர்களினால் எடுக்கப்பட்ட மனம் நிறைந்த அருள் அலை வீசும் சிவாலயங்கள் நிறைந்த கோட்டமாகிய நல்லூருக்கு இன்று அணியாக விளங்கு வது அங்குள்ள **கந்தவேள் கோயிலா கும்.**

தமிழுக்கும் சைவத்திற்கும் அருந்தொண்டுகள் ஆற்றிய யாழ்ப்பாணத்தரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்து வந்ததும், அவர்களது முக்கிய வணக்கத்தலங்களுள் ஒன்றாகவிருந்ததும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். இக்கோயில் ஆரியச் சக்கரவர்த்தியின் முதலமைச்சராக விளங்கிய **புவனேகபாகு** என்பவனால் கட்டப்பட்டதென்பர் ஒரு சாரார். இன்னொரு சாரார், யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய **செண்பகப்பெருமாள்** என்னும் **புவனேக வாகுவினால்** 1454இல் கட்டப்பட்டதென்பர். எது எப்படியாயினும், புவனேக வாகு என்பவனது பெயர் மகோற்சவங்களில் ஆலயக் கட்டியத்தில் கூறப்பட்டு வரும் வழக்கம் இன்றும் இவ்வாலயத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டை நல்லூரில் 64 வீதிகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் கந்தவேள் கோவிலுக்கு நியமப்படி தொழும்பு செய்பவர்கள் வாழ்ந்து வந்தனர். பலதலைமுறைகளும், பல அரசமுறைகளும் உருண்டோடி விட்டன. ஆயினும், இக்கோயிற் தொழும்பு முறையால் ஏற்பட்ட இவ்வாலய அயல் இடங்களினது பெயர்கள் இன்றுவரையும் மாற்றமடையாது நின்று நிலவி வருகின்றன. அவ்விடங்களில் வாழும் மக்கள் தலைமுறை தலைமுறையாகத் தொன்று தொட்டுச் செய்துவரும் தொழும்புகளை மறவாது உரிமையோடு செய்து வருகின்றனர். இவை இவ்வால

யத்தின் பண்டைப் பெருமையை நினைவு கூர வைத்து, இப்பெருமான் மீது இம்மக்க ளுக்கு இருந்துவரும் பக்தியையும் எடுத்துக் காட்டுகின்றன.

1478இல் அரசகட்டிலேறிய சிங்கை பரராசசேகரன் இவ்வாலயத்திற்கண்மையில் பகரவடிவிலான திருமஞ்சனக்கேணி ஒன்றை அமைப்பித்தான். புண்ணிய நதியான யமுனையிலிருந்து தீர்த்தம் தருவித்து இவ்வேரியில் சொரிவித்தான். அதனால் அவ் வேரியை "யமுனையேரி" என்றழைப்பாரா யினர். "யமுனாரி" என இன்று அழைக்கப் படுவதும் இவ்வேரியேயாகும்.

400 ஆண்டுகள் வரை சைவத் தமிழரசர்களால் ஆளப்பட்டுவந்த யாழ்ப் பாணவரசு 2-2-1621இல் அந்நியரான போர்த் துக்கேயரின் கைப்பட்டது. யாழ்ப்பாணவரசு வீழ்ச்சியுடன் சைவ ஆலயங்கள் பல போர்த்துக்கேயரினால் இடித்தழித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அப்படியாக அழிக்கப்பட்ட சைவக்கோயில்களுள் மகோன்னத நிலையிலிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவிலும் ஒன்றாகும். இதனை அழித்தவன் 'ஒலிபறா' என்னும் பறங்கித் தளபதியாம். கோவிலை அழித்துச் சூறையாடியதோடு நிற்காது, அ∴து இருந்த இடமும் தெரியாதபடி அத்திவாரத்தையுமே கிளறியெடுத்துவிட்டதாம் பறங்கிப்படை. போர்த்துக்கேயரிடமிருந்து 21-6-1658இல் யாழ்ப்பாணவரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது. அப்போது அவர்கள் தங்கள் மதவணக்கத்திற்குரிய தேவாலயம் ஒன்றைப் பழைய கந்தசுவாமி கோவில் இருந்த இடத்தில் கட்டிக்கொண்டனர். பழையநல்லூர் கந்தப்பெருமான் கோவில் இருந்த யமுனா ஏரிக்குப் பக்கத்தில் இன்று இருப்பது ஒல்லாந்தர் காலத் திருச்சபைத் தேவாலயமாகும்.

இப்படியாகப் புறத்தோற்றத்தில் இருந்த நல்லூர்க் கோவிலை அந்நியரால் அழிக்கமுடிந்ததே தவிர, அவனடியாரது **அகக்கோயில்** வழிபாட்டை அவர்களால் அழிக்கவோ, அகற்றவோ, அசைக்கவோ முடியவில்லை. எனினும் மனத்தகத்தவ னாகிய முருகப்பெருமானுக்குப் பழைய கோவிலுக்கு அண்மையில், கிட்டத்தட்ட 1734இல், புதிய ஒரு சிறு மடாலயம் அமைத்தனர். ஆரம்பத்தில் இம்மடாலயம் கந்தபுராணம் படிக்கும் இடமாகவே பெரி தும் பயன்பட்டு வந்தது. இம்மடாலயத்தில் வேல் ஒன்றையே வைத்து வழிபட்டும் வந்தனர். மடாலயமாக இது இருந்ததினாற் தான் தூபி எதுவும் இல்லாது இருந்து வந்தது. அக்கால ஒல்லாந்தர் ஆட்சியில் சிறாப்பராக இருந்த **இரகுநாதமாப்பாண** முதலியார் தனது செல்வாக்கைப் பயன் படுத்தி இம்மடாலயத்தைக் கற்களாலும், செங்கற்களாலும் கட்டுவித்து ஓட்டால் வேயப்பட்ட கோயில் ஆக்கினார். அவர் பரம்பரையில் வந்தோரே அன்று தொடக்கம் ஆலயத்தை நிர்வகித்து வரும் **அறங் காவலர்களாக** இன்றுவரை இருந்து வரு கின்றனர்.

இக்கோயிலைக் கருங்கற்களாற் கட்டவேண்டும் எனவும், மூலத்தானத்தில் வேலுக்குப் பதிலாகத் தேவப்பிரதிட்டை செய்யப்பட வேண்டுமெனவும் கூறி வந்த வர் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** அவர்கள் ஆவார். இதற்காக அவர் மூவாயிரம் ரூபாவரை பணமும் திரட்டிக் கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது. ஆயின் இவர் காலத்தில் இவை நிறைவேறவில்லை.

மூலத்தானத் தளவேலைகள் கருங்கற்றிருப்பணியாக 1902இல் நிறைவேறி ஆலயப் பிரதிட்டை செய்யப்பட்டுக் குட முழுக்கு நடைபெற்றது. 1909இல் சுற்றுப் பிரகார மண்டபங்கள் கட்டப்பட்டன. ஆயின் இவற்றுக்கு முன்னதாக 1899இல் மணிக் கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருக் கின்றது. இதற்குச் சான்று அதிலுள்ள செப்பேடாகும்.

**இவ்வாலயம் குமார தந்திர முறையில் பூசை நடைபெறும் தலமா**

கும். ஈழத்தில் இம்முறையில் பூசை நடைபெறும் தலம் இது ஒன்றேயாம். இன்று இவ்வாலயத்தில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நேரம் தவறாது குறித்தபடி நடைபெற்றுவருகின்றன. மற்றும் சிறப்பு விழாக்களும் இதே ஒழுங்கிற்றான் நடை பெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதப்பிறப் பன்றும் திருவனந்தற் பூசைக்கு முன்ன தாகப் பூந்தோட்டத் திருமஞ்சனக் கிணற் றில் தீர்த்தம் நடைபெறுவது இவ்வாலய வழக்கம். இங்கு மாதந்தோறும் கார்த்திகை உற்சவம் சிறப்பாக நடைபெறுவதுடன், சஷ்டி தோறும் செல்வமுத்துக்குமார சுவா மிக்குத் திருமஞ்சனமும் நடைபெறுகின்றது.

இவ்வாலய மகோற்சவம் இருபத் தைந்து நாட்கள் நடைபெறும். இவ்வாலயக் கொடியேற்றச் சீலையை ஆண்டுதோறும் நல்லூரில் வாழ்ந்துவரும் செங்குந்த மரபினரே அழகிய தேரில் வைத்துக் கொண்டுவந்து கொடுப்பர். ஆவணிமாத அமாவாசையன்று தீர்த்தமும், முதல்நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். இக்காலத் தில் செந்துவர் வாயார் சேவடி சிந்திக்க வரும் பக்தர்கள் கூட்டம் பல்லாயிரமாக இருக்கும். இக்காட்சி **அப்பர் பெருமான் “முத்துவிதானம்” என்ற திரு ஆரூர்ப் பதிகத்தில் காட்டும் ஆதிரைநாட் காட்சியையும் சிறப்பையும் எண்ணச்** செய்யும்.

**தேர்த்திருவிழாவன்று மாலை தேர்முட்டியில் சண்முகப் பெருமானுக் குப் பச்சை சாத்தி நடைபெறும் அர்ச்ச னையும், அப்பொலிவோடு பெருமான் ஆலயத்திற்குத் திரும்பும் கோலமும் நெஞ்சை நெகிழ்விப்பதாகும். பச்சை சாத்தி எழுந்தருளுவதன் நோக்கம் ”எல்லாச் சீவராசிகளுக்கும் எல்லா அநுக்கிரகங்களையும் செய்யும் கருத் தாவாகிய சதாசிவமூர்த்தியாக உள்ள வர் தானே என்பதையும், வேண்டுவார் வேண்டுவதை ஈயும் தன்மையும் தனக்கே உடையதென்பதையும் காட்டி, எல்லா நலன்களையும் பெற்று வாழுங் கள் என்று அருள் செய்யும் குறிப்பை உணர்த்தும் கோலம்” என்பதுதான்.**

இங்கு ஒவ்வொரு மூர்த்திக்கும் விலையுயர்ந்த தங்க, வைர, இரத்தினங் களால் ஆகிய ஆபரணங்கள் உள. அதே போன்று வெள்ளி தங்க வாகனங்களும், சிங்காசனமும் உள.

கோயிலின் கிழக்கு வாயிலைச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த ஐந்தடுக்குக் கோபுரமும், அதன் இருமருங்கு முள்ள அழகிய மணிக்கூட்டுக் கோபுரங் களும் அணிசெய்கின்றன. தெற்கு வீதியில் இன்னொரு கோபுரம் கோயிலை அழகு செய்கிறது. இதற்கு நேராகத் தெற்குப் புற வெளிவீதிக்குத் தெற்கே அழகிய தீர்த்தக்கேணியும், தண்டாயுதபாணி கோவி லும் இருக்கின்றன. இத்திருக் கேணியிற்றான் மகோற்சவகாலத் தீர்த்தம் நடைபெறுகிறது.

கோயிலைச் சுற்றிவரப் பல மடங் கள் இருக்கின்றன. அவற்றுள் தேர்முட்டிக்கு அண்மையில் உள்ள அறுபத்து மூவர் குருபூசை மடம் பிரபல்யமானது. இதுவே சடையம்மாமடம் எனப்படுவதாகும். இம் மடம் 1942ஆம் ஆண்டு கட்டப்பட்டது. நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம், முத்துத்தம்பி மடம் என பல ஆலயச் சூழலில் உள்ளன. இங்கே மகோற்சவ காலங்களில் அன்னதான நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம்.

படமாடும் இக்கோயிற் குமரனிடம், நடமாடும் கோயில்களாக விளங்கிய யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையில் வழி வந்த செல்லப்பாச்சாமி, யோகர்சாமி போன்ற ஞானவான்கள் வந்து தரிசனஞ்செய்து நடமாடி இருக்கின்றனர்.

இவ்வாலயம் இன்றிருக்கும் காணி யின் பெயர் குருக்கள் வளவு. இவ்வாலயச் சுற்றாடலில் அமைந்துள்ளது திருஞானசம் பந்தர் ஆதீனமாகும். இது சுவாமிநாத தேசிகபரமாச்சாரிய சுவாமிகளால் தாபிக் கப்பட்டதாகும். அருகில் இருப்பது நல்லூர் சிவன் தேவஸ்தானமாகும். நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு மேற்குப்புறமாக இருப்பது முத்துவிநாயகர் கோவிலாகும்.

# திருநீற்றின் மகிமை

**க.சிவசங்கரநாதன்** (சமாதான நீதிபதி)

ஐங்கரன் என்பவன் நெய்யும் தொழில் செய்பவன். செய்யும் தொழில்களில் நெய்யும் தொழில் சிறந்தது. மனம் உள்ளவனுக்கு மானம் இருக்கவேண்டும். மானத்தை காப்பது துணி. அதனால் இத்தொழில் உயர்ந்தது. ஐங்கரன் ஓய்வு ஒழிச்சல் இன்றிக் கண்ணும் கருத்துமாக நெசவு செய்வான். அவனுடைய துணி அழுத்தமாகவும் வளமையாகவும் இருப்பதனால் மக்கள் விருப்புடன் வாங்கிக் கொள்ளுவார்கள். துணி நெய்வதனால் வருவாய் குறைவாகத்தான் வரும் வறுமையாகிய சிறுமையால் வாடினான். அவன் மனைவி சத்தியவதி நல்ல சிவபக்தி உடையவள். திறமையும் ஒழுக்கமும் உடையவள். பூசை ஆலய வழிபாடு ஜபம் முதலிய நித்திய கருமங்களில் வழுவாது நிற்பவள்.

ஐங்கரனுக்கு இவைகள் செய்ய நேரம் கிடையாது. விடியும் முன்னரே தறியில் அமர்ந்து நெய்யத் தொடங்குவான். தறியில் இருந்தபடியே மனைவி கொடுக்கும் கேழ்வரகுக் கூழைக் குடிப்பான். மாலைநேரம் வந்ததும் தறியை விட்டு இறங்கி உண்டு களைத்து உறங்கிவிடுவான். அந்த ஊரில் குருநாதர் வந்து எல்லோருக்கும் சிவதீட்சை கொடுத்தார். ஐங்கரன் அதில் ஈடுபடவில்லை அவனுக்கு தறியே குறி வேறு நெறியில்லை. கணவனிடம் சத்தியவதி அனுமதி பெற்றுத் தீட்சை பெற்றுக்கொண்டாள் அவள் காலை மாலை அநுட்டானம் செய்வாள். சத்தியவதி கணவனைப் பார்த்து சதா நெய்து கொண்டேயிருக்கின்றீரே? ஆத்ம லாபம் தேட வேண்டாமா? நீரும் தீட்சை பெற்றுக் காலை, மாலை பத்து நிமிசம் பஞ்சாட்சர ஜெபம் செய்யுங்கள் உடம்பை வளர்ப்பதோடு உயிரையும் வளர்க்கவேண்டும். உயிருக்கு உறுதி செய்வது ஐந்தெழுத்து என்று இதம் பதமாகச் சொன்னாள்.

ஐங்கரன் சத்தி நீ ஜெபம் செய்யவோ விரதம் அனுட்டிக்கவோ யான் தடுக்க மாட்டேன். நான் நெசவாளி எட்டிப் பார்த்தால் எட்டு இழை குறையும் எனக்கு அநுட்டானம் செய்ய நேரம் கிடையாது என கண்டித்துக் கூறி விட்டான். தற்செயலாகக் குருநாதரே அச்சமயம் அங்கு எழுந்தருளினார் சத்தியவதி அவரை வணங்கினாள் ஐங்கரன் தறியில் இருந்த படியே கும்பிட்டான். சத்தியவதியிட்ட ஆசனத்தில் அவர் அமர்ந்தார். குருநாதர் அப்பனே நீ தீட்சை பெற்றுச் சில நிமிஷம் வழிபாடு செய்யலாமே என்றார்.

சுவாமி மன்னிக்கவேண்டும் என்ன செய்வேன் நான் ஏழை நெசவாளி பஞ்சு படாத பாடுபட்டுக் கஞ்சி குடிக்கிறேன். எனக்கு நேரம் கிடையாது. உங்கள் ஆசீர்வாதம் இருந்தால் அதுவே போதும் ஏழை ஈடேறுவேன் என்றான் ஐங்கரன். நல்லது உனக்குச் சிவபெருமான் கருணை புரிவார் திருநீறு பூசிக்கொண்டு ஒரு நிமிஷம் சிவமூர்த்தியைத் தியானம் செய்யலாமே?

சுவாமி அந்த நிமிஷத்தில் ஒரு விரற்கடை நெய்தால் வயிறு நிரம்பும். அப்படியா நன்றுசெய் திருநீறு தரித்த திருமுகத்தைத் தரிசித்துவிட்டுப் பின்னராவது கஞ்சிகுடி இந்த ஒரு நியமத்தையாவது கடைப்பிடித்து ஒழுகு உனக்கு நலம் விளையும். அப்படியே செய்கிறேன். வாழ்க. குருநாதர் போய்விட்டார். பக்கத்து வீட்டில்பரமசிவம் என்ற குயவனார் வாழ்ந்து வந்தார். அவர் சிவபூசை செய்பவர் எப்போதும் நெற்றியில் நீறணிவார் அடிக்கடி ஜன்னல் வழி ஐங்கரனிடம் பொடிக்கு வருவார். அவரைப்பார்த்து

விட்டு ஐங்கரன் தறியில் இருந்தபடியே கூழைக்குடிப்பான். இவ்வாறு சிலதினங்கள் கழிந்தன ஒரு நாள் பரமசிவத்துக்கு காசு கிடைக்கப்பொடி வாங்கிவிட்டார். அதனால் பொடி கேட்க வரவில்லை. ஐங்கரனுக்கு கடும்பசி திருநீற்று முகத்தைப் பார்த்த பிறகுதானே சாப்பாடு இந்த நியதியில் உறுதியுடன் இருந்தான். பாழாய் போன பரமசிவத்தைக் காணவில்லையே? வயிறு பசிக்கின்றதே என்று மனம் நொந்தான். வேறு வழியில்லை. தறியை விட்டு இறங்கினான். அடுத்த வீட்டுக்கு ஓடினான் அந்த நேரம் களிமண் கொணரப் பரமசிவம் ஊருக்கு அருகில் உள்ள ஏரிக்கு சென்றிருந்தார். ஐங்கரனுக்கு மேலும் ஏமாற்றம் ஓடினான்.

பரமசிவம் ஏரியில் மண் எடுக்க குழியில் மண்ணைத் தோண்டினார் அதில் பவுண்கள் நிறைந்த இரு செப்பு குடங்கள் இருந்தன. யாராவது பார்த்து விடுவார்களோ என்று நிமிர்ந்து பார்த்தார் அதே சமயம் ஐங்கரன் ஓடி வந்து பார்த்து விட்டேன் என்று கூறி விட்டு திரும்பினான்.

அவன் புதையலைப் பார்க்கவில்லை திருநீறிட்ட முகத்தை மட்டுமே பார்த்தான் பிறகு அவசரம் அவசரமாக ஓடித்தறியில் அமர்ந்து கூழ் குடித்தான். புதையலை எடுத்து மறைத்து விட்டு வந்த பரமசிவம் இரகசியமாக சத்தியவதியை அழைத்து அம்மா இருபுதையல்கள் கிடைத்தன. உன் கணவனார் பார்த்துவிட்டு வந்தார் வெளியே சொன்னால் அரசாங்கம் அபகரித்துக்கொள்ளும் ஒன்று உனக்கு மற்றொன்று எனக்கு இது நமக்குள்ளே இருக்கட்டும் என்று செப்புக்குடத்தை கொடுத்தார். சத்தியவதி கணவரைப்பார்த்து நீர் பரமசிவத்தைப் பார்க்க சென்றீரே என்ன பார்த்தீர் என்று கேட்டாள்.

என்ன பார்த்தேன் உன்தலை விபூதி பூசிய முகத்தைத்தான் கண்டு வந்தேன் என்றான். சத்தியவதி நடந்ததைக்கூறிப் புதையலைக் காட்டினாள் ஐங்கரன் ஆச்சரியம் அடைந்தான். நியதியாக திருநீறு பூசியதைப் பார்த்ததற்கே இப்பயனா? இனி நானே திருநீறு பூசி ஈடேறுவேன் என்று எண்ணி தீட்சை பெற்றுச் சிவபூசை செய்து செல்வச்சிறப்புடன் வாழ்ந்தான். சைவத் தமிழ் மக்கள் அனைவரும் திருநீறு பூசியும் தீட்சை பெற்றும் நல்வாழ்வு வாழ இறைவன் திருவருள் புரிவாராக.

## அர்ச்சனைக்கு உவந்த பூக்கள்:-


| | |
|---|---|
| **பிள்ளையார்:** | வெள்ளெருக்கு, அறுகு, வன்னி, மந்தாரை, கோங்கு, செம்பருத்தி, நந்தியாவர்த்தம், தாமரை, ரோஜா. |
| **சிவபிரான்:** | தும்பை, கொன்றை, வன்னி, சங்குப்பூ, வில்வம், மந்தாரை. |
| **முருகன்:** | சண்பகம், கடம்பு, காந்தள், (கார்த்திகைப்பூ) மல்லிகை, முல்லை, சாமந்தி, செவ்வந்தி, மரு, ரோஜா, வெட்சி. |
| **அம்பிகை:** | வெண்தாமரை, மல்லிகை, முல்லை, இருவாட்சி, சூரியகாந்தி, பவளமல்லிகை, மாதுளை, மரு, செம்பருத்தி, மந்தாரை. |
| **திருமால்:** | துளசி, விஷ்ணுகாந்தி, பவளமல்லிகை, தாமரை, மரு, நீலப்பூ. |
| **வரலட்சுமி:** | தாழம்பூ, துளசி, தாமரை. |
| **சரஸ்வதி:** | மல்லிகை, முல்லை, நித்தியகல்யாணி, நந்தியாவர்த்தம், மந்தாரை, வெண்தாமரை. |

**நன்றி:- அருட்சகோதரி யதீஸ்வரி**

உ

சிவமயம்

# நல்லூர் கந்தன் ஆலயம்



"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி – கிளியே
இரவு பகல் காணேனடி" (நல்லூரான்)

உ

சிவமயம்

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே

(அபிராமி அந்தாதி)



துர்க்கா புஷ்கரணியில் அம்பாள் தீர்த்தமாடும் காட்சி

அட்டைப்பதிப்பு அன்பளிப்பு: அனுஷ் பிரின்டர்ஸ் கொழும்பு-11.